# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2028 ஆவணி 03 செவ்வாய்க்கிழமை (19-08-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 254


# திருமலையில் நேற்று படையினர் சூடு!
# ஆட்சேபித்து மக்கள் மறியல் போர்!!

## அவர்களைக் கலைக்கவும் வானத்தை நோக்கி வேட்டு

-- உதயன் திருமலைச் செய்தியாளர் --

திருகோணமலை, ஒகஸ்ட் 19

திருகோணமலை நகரில் திருக்கடலூர்ப் பகுதியில் நேற்றுக் காலை இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் அப்பாவி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்; மற்றொரு இளைஞர் காயமடைந்தார்.

இதனை ஆட்சேபித்து வீதிமறியலில் ஈடுபட்ட மக்களை வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்து படையினர் துரத்தினர்.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:

திருகோணமலை ரயில் நிலையத்தில் இருந்து சுமார் கால் மைல் தூரத்தில் அமைந்துள்ளது மீனவ கிராமமான திருக்கடலூர்.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் தேடுதல் நடத்துவதற்காக அந்தப் பகுதிக்குச் சென்ற படையினர் அங்கு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிகின்றது.

படையினரின் வேட்டுக்களை அடுத்து அக்கிராம மக்கள் சிதறி ஓடினர்.

படையினரின் சூட்டில் இலட்சுமிகாந்தன் தமயந்தன் (வயது 21) என்ற இளைஞன் மூளை சிதறிய நிலையில் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

படுகாயமுற்ற கிருஷ்ண மூர்த்தி முரளிதரன் (வயது 22) என்ற இளைஞன் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டார்.

இராணுவத்தினர் இராமநாதன் சுரேந்திரன் (வயது 24), இராமநாதன் மகேந்திரன் (வயது 20), கஜேந்திரன் கமலதாஸ் (வயது 24), கந்தசாமி பிரகாஸ்குமார் (வயது 25) ஆகிய இளைஞர்களைக் கைதுசெய்து கொண்டு சென்றனர்.

இச்சம்பவத்தில் இறந்தவர், காயம் அடைந்தவர், கைதானவர்கள் அனைவரும் அப்பாவி மீனவர்கள் என்று ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த சம்பவம் குறித்து ஈ. பி. டி. பியின் திருமலை அலுவலகப் பொறுப்பாளர் தமது கட்சியின் செயலாளர்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'தராகி' கப்பலின் ஓர் இயந்திரம் பழுது!

### திருமலையில் திருத்த வேலை

மன்னார் — காங்கேசன் துறை சேவையில் ஈடுபட்ட 'தராகி' கப்பலின் ஓர் இயந்திரம் பழுதடைந்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சேவையை இடைநிறுத்திக்கொண்டு கப்பல் திருகோணமலைக்கு வந்துள்ளது.

இக்கப்பலின் பழுதடைந்த இயந்திரம் திருத்தபபட்டுவருவதாகவும் —

திருத்தி முடிந்த பின்னர் பயணிகள் சேவைக்காக கப்பல் காங்கேசன் துறைக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

கப்பலின் திருத்த வேலைகள் முடிக்க எவ்வளவு நாள் செல்லும் என்பதை உடனடியாகக் கூறமுடியாதுள்ளது என்று கப்பலைத் திருத்தும் பொறியியலாளர் குறிப்பிட்டார்.

நீண்ட நாள்களாகத் தடைப்பட்டிருந்த இக்கப்பலின் சேவை கடந்த சில நாள்களுக்கு முன்னர்தான் மீண்டும் ஆரம்பமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(உ-150-3)

## படை நடவடிக்கையின் 100 ஆவது நாள் நாளை!

கொழும்பு, ஒகஸ்ட் 19

வவுனியாவிலிருந்து வன்னிப் பெரு நிலப் பரப்பின் ஊடாகக் குடாநாட்டுக்கு தரைவழிப் பாதை ஒன்றைத் திறக்கும் இலக்குடன் கடந்த மே மாதம் 13 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ''வெற்றி உறுதி'' (ஜெயசிகுறு) இராணுவ நடவடிக்கை நாளை நூறாவது நாளை எட்டுகிறது.

கடந்த 14 ஆண்டு கால யுத்தத்தில் ஸ்ரீலங்காப் படையினர் மேற்கொண்ட மிக நீண்ட — மிகப்பெரிய — இராணுவ நடவடிக்கையாக இது அமைகிறது.

வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான கண்டி நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதற்காக இந்த நடவடிக்கையில் ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் இருந்து இதுவரை 17 கிலோ மீற்றர் தூரத்தையே

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் ஷெல் வீச்சில் மூவர் பலி! 30 பேர் காயம்!!

கொழும்பு, ஒக. 19

உயிலங்குளம், முருங்கன், தள்ளாடி இராணுவ முகாம்களிலிருந்து இராணுவக் கட்டுப்பாடற்ற கறுக்காய்க்குளம், ஆண்டான்குளம், விடத்தல் தீவு ஆகிய பகுதிகளை நோக்கி கடந்த சனியன்று மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களில் முப்பது பேர் வரை படுகாயமடைந்ததாகவும், மூன்று பொது மக்கள் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்தவர்களில் சிலர் மடுவுக்கு மிகுந்த போக்குவரத்துக் கஷ்டங்களுக்கு மத்தியில் — மோட்டார்சைக்கிள் மூலம்கொண்டு வரப்பட்டனர்.

அவர்களில் நால்வர் பின்னர் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டனர்.

(ஐ-உ)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை:
## விடைத்தாள்கள் திருத்த விஞ்ஞான ஆசிரியர் மறுப்பு

கொழும்பு, ஒக. 19

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணியை தாங்கள் பகிஷ்கரித்துள்ளதாக இலங்கை விஞ்ஞான ஆசிரியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சம்பள முரண்பாடு மற்றும் தங்களை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்வது ஆகியன குறித்து அரசு தீர்க்கமான முடிவேதும் எடுக்காததால் தாங்கள் விடைத்தாள் மதிப்பிடும் பணியைப் பகிஷ்கரிப்பதாக அச் சங்கம் தெரிவித்துள்ளது.

இச்சங்கத்தின் தீர்மானத்தை வடக்கு — கிழக்கு விஞ்ஞானப் பட்டதாரி ஆசிரியர்களும் ஆதரிப்பதாகக் கூறப்பட்டது.

எனினும் கலைப் பாடங்கள் தொடர்பான மதிப்பீட்டுப் பணிகள் முன்னர் தீர்மானித்தபடி இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் என மற்றொரு செய்தி தெரிவித்தது.

(உ-10-16)

## கைப்பற்றிய வன்னிப் பகுதியில் விசேட படை நடவடிக்கையாம்!

கொழும்பு, ஒக. 19

வவுனியாவுக்கு வடக்கே 'ஜெய சிகுறு' இராணுவ நடவடிக்கை மூலம் விடுக்கப்பட்ட பகுதிகளில் விசேட இராணுவ நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட பகுதிகளில் இன்னமும் ஒளிந்திருக்கக் கூடிய விடுதலைப் புலிகளைத் தேடி அழிப்பதே இந்த விசேட தாக்குதல் நடவடிக்கையின் நோக்கம் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பெரிய மடுவில் இருந்து மணலாறு வரையான பிரதேசத்தில் படையினர் தங்கள் நிலைகளைப் பலப்படுத்தியுள்ளனர் என்றும் —

'ஜெய சிகுறு' நடவடிக்கையின் இலக்கை எட்டும் வரை போர்முனையில் உள்ள துருப்பினர் தொடர்ந்தும் தாக்குதலில் ஈடுபடுவர் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

### புளியங்குளத்தில் 5 புலிகள் களப் பலி!

வவுனியா, ஒக. 19

நேற்றும் நேற்று முன்தினமும் புளியங்குளத்தை அண்டிய பகுதிகளில் இராணுவத்தினருடன் இடம் பெற்ற மோதல்களில் தமது தரப்பில் 5 போராளிகள் களப் பலியானதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது—

சின்ன மணி, இருதயநாதன், தமிழரசன், செங்கோளன், கலையரசன் ஆகிய போராளிகளே பலியானதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

## தீவக ஊழியர்களுக்கு ஆபத்துக் கொடுப்பனவு

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல்களுக்கு உள்ளான பகுதிகளில் சிவில் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள அரச ஊழியர்களுக்கு ஆபத்துக் கொடுப்பனவு வழங்குவது என அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இதன்படி அனுராதபுரம், பொலனறுவ, மொனராகல, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சில பகுதிகளிலும் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துத் தீவுப் பகுதிகளிலும் பணியாற்றும் அரசாங்க ஊழியர்களுக்கும் ஆபத்துக் கொடுப்பனவு வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

(உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவிகள் எடுத்து வரப்பட்டும்

# பற்சிகிச்சைப் பிரிவு இயங்க முடியாத நிலை

யாழ்ப்பாணம், ஒக. 19

யாழ். போதனாவைத்திய சாலை பற்சிகிச்சைப்பிரிவுக்கு உரிய நவீன கருவிகள், இயந்திரங்கள் எடுத்துவரப்பட்டும் இன்னும் அது இயங்க ஆரம்பிக்கவில்லை.

முக்கியமாக சுத்திகரிக்கப்பட்ட (வடிகட்டிய) நீரின் உதவியுடன் இயங்கும் இந்த இயந்திரக் கருவிகளுக்கு வேண்டிய நீரைப்பெறுவதற்கென நீர்த்தாங்கி அமைக்கப்பட்டும், போதியளவு வடிகட்டிய நீரைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை இருந்து வருகிறது.

சாதாரண கிணற்று நீரைப் பெற்று அதன் உதவியுடன் கருவியை இயக்கி செயற்படுத்தலாம் என முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் அதுவும் கைகூடவில்லை என்று கூறப்படுகிறது.

போதனா வைத்தியசாலையின் தேவைகளுக்காகப்பாவிக்கப்படும் கிணறுகளில் தற்போது நீர் வற்றிக் குறைந்த அளவில் இருப்பதே நீரைப் பயன்படுத்த முடியாது இருப்பதற்குக் காரணம் ஆகும். (இ-15)

## பாலம் திருத்தப்பட்டது

தென்மராட்சி, ஒக. 19

சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் உடைந்து விழும் நிலையில் காணப்பட்ட பாலம் தற்காலிகமாக திருத்தப்பட்டு பொது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப் பாலம் உடைந்து விழும் நிலையில் உள்ளதாக பாதசாரிகள் முறையிட்டதை அடுத்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் இப்பாலத்தை தற்காலிகமாகத் திருத்தியுள்ளனர். (ஐ-117)

## கப்பல் கட்டணம் மீளளிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 19

கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணிகள் கப்பலில் செல்வதற்காகத் தெல்லிப்பழை வரை சென்று இடை நடுவில் திரும்பியவர்களுக்கு அவர்களால் செலுத்தப்பட்ட கப்பல் கட்டணம் மீளளிக்கப்படவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

யாழ். ரயில் நிலையத்தில் வைத்துவழங்கப்பட்ட பயண அனுமதிச் சிட்டையை யாழ். செயலகத்தில் பொதுமக்கள் தொடர்பு அதிகாரி எஸ். கதிர்காமநாதனிடம் சமர்ப்பித்துப் பணத்தை மீளப் பெற முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

திருமலை அகதிகள் விவகாரம்:

# அதிகாரிகள் தலையிட்டதை அடுத்து உண்ணாவிரதம் கைவிடப்பட்டது!

திருகோணமலை, ஒக. 19

யாழ்ப்பாணம் வருவதற்கு கப்பல் வசதியின்றி உப்புவெளி கண்ணாடித் தொழிற்சாலையில் தங்கியுள்ள 750 அகதிகள் தம்மை யாழ்ப்பாணத்துக்கு அனுப்புமாறு கோரி நேற்றுக் காலை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அகதி முகாம் கதவுகளை மூடிவிட்டு எவரும் உள்ளே செல்ல முடியாதவாறு ஏற்பாடுகளைச் செய்துவிட்டுக் காலையில் தமது போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்தனர்.

இவர்களுக்குக் காலை உணவை வழங்குவோர் அங்கு உணவைக் கொண்டு சென்றபோதும் கதவுகள் மூடப்பட்டதால் வெளியில் உள்ள கடை ஒன்றில் அவற்றை ஒப்படைத்தனர்.

அகதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கும் பவுஸர் வண்டியும் முகாமுக்கு வெளியே காத்து நிற்க நேர்ந்தது.

இந்த விடயத்தை திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலர் வி. வேலும் மயிலும் உடனடியாக இராணுவ அதிகாரிக்கும் வடமாகாண புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் சோமபால குணதிரவுக்கும் தகவல் கொடுத்தார்.

நண்பகல் அளவில் ஈ. பி. டி. பியின் திருகோணமலை மாவட்ட துணைப் பொறுப்பாளர் சீலன் அகதி முகாமுக்குச் சென்று அவர்களுடன் பேச்சு நடத்தினார்.

''எம்மை யாழ்ப்பாணம் அனுப்பவேண்டும். இல்லையேல் வவுனியாவுக்கு திருப்பி அனுப்ப வேண்டும்'' என்று அகதிகள் கோரிக்கை விடுத்தனர்.

இது தொடர்பாக உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுப்பதாக அகதிகளிடம் அவர் உறுதியளித்தார்.

தாம் தங்கியிருக்கும் முகாமில் வழங்கப்படும் உணவு தரமற்றது என்றும் —

முகாமின் கூரை சேதமடைந்துள்ளதால் மழை பெய்யும்போது ஒழுக்கு ஏற்படுகிறது என்றும்—

முகாம் பொறுப்பதிகாரியாக இருப்பவர் தம்மை இம்சிப்பதால் அவர் மாற்றப்பட வேண்டும் என்றும் — அகதிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கோரிக்கைகளுக்கு உடன் தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ஈ.பி.டி.பி. துணைப் பொறுப்பாளர் சீலன் அகதிகளிடம் தெரிவித்ததை அடுத்து நண்பகல் அளவில் அவர்கள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

ஒருவார காலத்தில் கப்பல் மூலம் தம்மை யாழ்ப்பாணம் அனுப்பாவிட்டால் மீண்டும் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிப்போம் என்று அகதிகள் அச்சுறுத்தி உள்ளனர்.

இதேவேளை — தற்சமயம் திருகோணமலையில் தரித்து நிற்கும் 'தராகி' கப்பல் காங்கேசன்துறைக்குத் திரும்பும்போது இவர்களில் 290 பேரை ஏற்றிச்செல்ல ஏற்பாடு செய்வதாக திருகோணமலை இராணுவ அதிகாரி பிரதேச செயலர் வேலும் மயிலுவிடம் தெரிவித்துள்ளார். (ஐ-150-3)

## விடைத்தாள் திருத்தச் செல்ல இன்று விமானப் பயண ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 19

தற்சமயம் நடைபெற்று வரும் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சையின் விடைத்தாள் மதிப்பிடும் பணிக்காகக் கொழும்பு செல்ல பதிவு செய்த சகல ஆசிரியர்களையும் இன்று காலை 7 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு பயண ஏற்பாடுகளுடன் வருமாறு யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

விமானப் பயணத்துக்கான கட்டணத்தையும் உடன் கொண்டு வருமாறு அவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

எதிர் வரும் 21 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகும் விடைத்தாள் மதிப்பிடும் பணியில் பங்குபற்றுவதற்காக ஆசிரியர்கள் கப்பல் மூலம் செல்வதற்காக நேற்று முன்தினம் இங்கிருந்து பயணமர்கியதும்—

பின்னர் கப்பல் சேவை இடம் பெறாததால் இடை நடுவில் அவர்கள் அனைவரும் திரும்பி வந்ததும் தெரிந்தவையே. (ஐ-3)



## நன்றி நவிலல்

க. பொ. த. உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிக்காகக் கொழும்பு செல்வதற்கு விமானப் பயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு உதவிய யாழ். கல்வி வலயம் ஒன்றைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர், உதவிக் கல்விப் பணிப்பாளர், அலுவலர்கள் ஆகியோருக்கும், சிவில் நிர்வாக அலுவலகத்தினருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

- ஆசிரியர்கள்

(49092)



## மரண அறிவித்தல்கள்

### முருகப்பர் வேலுப்பிள்ளை

(மரக்காலை, சாமியன் அரசடி)

கரவெட்டி வடக்கைச் சேர்ந்த முருகப்பர் வேலுப்பிள்ளை 17-08-97 இல் தனது இல்லத்தில் காலமானார்.

அன்னார் திருமதி தங்கம்மாவின் அன்புக் கணவரும், அம்பிகைபாகன் (கனடா), அம்பலவாணன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பொற்கொடி, பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சஞ்சீவன், பரத்குமார், கார்த்திகா, கீர்த்தனன், துவாரகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18-08-97 அன்று காலை 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே. அம்பலவாணர்
(மகன்)

சாமியன் அரசடி
மரக்காலை,
கரவெட்டி வடக்கு,
கரவெட்டி.

(49077)

### திருமதி ஜீவமணி கிருபைராஜா

(முன்பள்ளி ஆசிரியை, தங்கோடை)

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த திருமதி ஜீவமணி (மணி ரீச்சர்) 18-08-1997 காலை கர்த்தருக்குள் மரித்தார்.

இவர் இ. கிருபைராஜா (பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை) அவர்களின் அன்பு மனைவியும், கிரிசாந்தி, கிரிசாந்தன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை 18-08-97 இல் 12/3 வைமன் வீதி இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தி. செல்வராசா (மைத்துனர்)
(இளைப்பாறிய அதிபர், காரைநகர்)

12/3 வைமன் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(49091)



## வினாத் தாள்கள் 3,4,5,6,7,8,9,10,O/L

ஆவணி மாதப் பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடனும், 10 - 08 - 1997 ஞாயிறு நடைபெற்ற ஆண்டு - 5 புலமைப்பரிசில் வினாத்தாள்களும் எம்மிடம் பெறலாம்.

BOND
யாழ்ப்பாணம்.
(49086)

## மலிவு விற்பனை

றெடிமேட் ரவுசர்
சகல அளவுகளிலும் விற்பனைக்கு உண்டு.
விலை: 250 ரூபா
சிவகணேசன ஸ்ரோர்ஸ்
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(49090)

## ஈசன் கல்வி நிலையம்

கோண்டாவில்

தூய பிரயோக கணிதம்
திரு. கருணா
பௌதிகவியல்
திரு. குமரன்
இரசாயனவியல்
திரு. றமேஸ்
விலங்கியல்
திரு. கெங்காதரன்
தாவரவியல்
பிரபல ஆசிரியர்

பகல் நேர வகுப்புகள்
ஆரம்பம்:
20-08-1997
மாலை 4-00 மணி
(49088)



## கல்விக் கல்லூரி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஒக. 19

மட்டக்களப்பு — வவுனியா கல்விக் கல்லூரிக்கு 1997—98 ஆம் கல்வி ஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று செவ்வாய்க்கிழமையும் யாழ். வலயம் - 1 அலுவலகத்தில் நடைபெறும்.

நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வந்த இந்த நேர்முகப் பரீட்சை இன்றுடன் முடிவடைகிறது.

இந்த நாள்களில் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கத் தவறியோர் யாழ். கல்வி வலயம்-1 அலுவலகத்துடன் உடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் —

எதிர்வரும் 26 ஆம் திகதிக்குப் பின் வவுனியா கல்வியியற் கல்லூரியில் இவர்கள் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## பரீட்சார்த்திகள் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக. 19

கடைசியாக நடைபெற்ற தாதியர் மாணவர் தெரிவுப் பரீட்சையில் 80 புள்ளிகளையும் அதற்கு மேலும் புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகள் தம்மை நேரில் வந்து அலுவலகத்தில் சந்திக்குமாறு யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

## மதில் விழுந்து சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 19

வெடிப்பு ஏற்பட்டு சேதம் அடைந்த நிலையில் இருந்த மதில் மேல் ஏறி விளையாடியவேளை, சரிந்து விழுந்த அந்த மதில் சுவரினுள் அகப்பட்டு சிறுவன் ஒருவன் காயமடைந்தார்.

மல்லாகத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பூபாலராசா ராஜமதன் (வயது-8) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கிழக்கில் மாடுகள் கடத்தல்

மட்டக்களப்பு மாவட்டம் கறுவாக்கேணி என்னுமிடத்தில் பண்ணை ஒன்றில் இருந்த 150 மாடுகள் இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளன.

இம்மாடுகளை விடுதலைப் புலிகளே கடத்திச் சென்றதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## படக்காட்சி

பகவான் ஸ்ரீ சாயிபாபாவின் அற்புதங்கள் தொடர்பான படக்காட்சி சாவகச்சேரி ஸ்ரீ சத்தியசாயிபாபா நிலையத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு காண்பிக்கப்படுமென நிலையத் தலைவர் டாக்டர் ச.கருணானந்தம் தெரிவித்தார். (ஐ-117)

## சீமெந்து தட்டுப்பாடு

தென்மராட்சிப் பகுதியில் சிமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல அபிவிருத்திப் பணிகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

சிமெந்து தட்டுப்பாட்டினால் பொது மக்கள் தங்கள் கட்டட திருத்த வேலைகளையும் கைவிட்டுள்ளனர். (ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றணரித் ஆதரவுப்படை தாக்குதல்களுக்கு முஸ்தீபு!

## கம்போடிய நிலைமை மோசமடைகிறது

நொம்பென் ஓக. 19

கம்போடியாவில் இளவரசர் றணரித்துக்கு விசுவாசமான துருப்புக்கள் சில மாநிலங்களில் தலைமறைவுத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்த தாக்குதல் அடுத்த சில நாள்களில் நடைபெறும் என்று இளவரசர் றணரித்தின் உதவியாளர் ஒருவர் தெரிவித்தார்.

ஹூன்சென் ஆதரவு அரச படைகள் மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு பதிலடியாக அது அமையும் என்றும் அவர் கூறினார்.

அதேசமயம் அரச படைகள் இளவரசர் றணரித்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஓமெச் கிராமத்தின் மீது பீரங்கித் தாக்குதல் நடத்தியதாக செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் கம்போடியாவில் இருந்து விரட்டியடிக்கப்பட்ட முதலாவது பிரதமர் இளவரசர் நொரடோம் றணரித் தற்போதைய தலைவர் ஹூன்சென்னுக்கு எதிராக சர்வதேச ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பிலிப்பீன்ஸ் தலைநகர் மணிலாவுக்கு வந்து சேர்ந்தார்.

மணிலா சர்வதேச விமான நிலையத்தில் வந்து இறங்கிய இளவரசர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் கூற மறுத்துவிட்டார்.

பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்ட அவர் பிலிப்பீன்ஸ் அதிபர் பிடல் ராமோஸை நேற்று சந்திக்கவிருந்தார். (இ-3)

## கோர்பச்சேவ் முட்டாள் என்கிறார் முகாப்வே!

சிம்பாப்வே, ஒகஸ்ட் 19

முன்னாள் சோவியத் யூனியனின் தலைவர் கோர்பச்சேவை முட்டாள் என்று பேட்டி ஒன்றில் தெரிவித்தார் சிம்பாப்வே அதிபர் ரொபர்ட் முகாப்வே.

ரஷ்யாவில் சோசலிசக் கட்டுமாணம் வீழ்ச்சி அடைந்ததற்கு கம்யூனிஸ சித்தாந்தம் காரணம் அல்ல, கம்யூனிஸ கோட்பாடுகளின் அடிப்படைகளை கோர்பச்சேவ் தடம் புரள விட்டதுதான் என்று முகாப்வே கூறினார்.

இதனை கோர்பச்சேவ் உணரத்தவறி இருந்தார். அவர் உணரத் தொடங்கிய போது நிலைமை அவரது கட்டுப்பாட்டைத் தாண்டிச் சென்றுவிட்டது என்றும் முகாப்வே கூறினார். (இ-8)

## ஜப்பானில் சுழற் காற்று

ரோக்கியோ, ஒக. 19

ஜப்பானில் புதுவிதமான சுழற் காற்று ஒன்று தற்போது வீசுகிறது.

இந்தச் சுழற்காற்றுக்கு வின்னி என்று பெயரிட்டுள்ளனர். (இ-5)

# பொன்விழாவை முன்னிட்டு இந்திய செயற்கைக்கோள்!

## விண்வெளி நிலையம் திட்டம்

புதுடில்லி, ஓக. 19

சுதந்திரதின பொன்விழாக் கொண்டாட்டங்களை முன்விட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் செயற்கைக்கோள் ஒன்றை விண்ணில் செலுத்தவிருப்பதாக அந்த நிலையத் தலைவர் கஸ்தூரி ரங்கன் தெரிவித்தார்.

பெங்களூரில் யு.என்.ஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில், அடுத்த மாத இறுதியிலோ அல்லது ஒக்ரோபர் மாத முற்பகுதியிலோ இந்த கோள் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக அவர் கூறினார்.

பி. எஸ். செல்வி றொக்கெட் மூலம் இந்த செயற்கைக் கோள் விண்ணிக்கு செலுத்தப்படும்.

இந்த றொக்கெட்டை வெற்றிகரமாகச் செலுத்துவதன் மூலம் தனது விண்கலங்களை தானே விண்ணில் செலுத்தக் கூடிய திறன் கொண்ட ஒரு சில நாடுகளில் இந்தியாவும் ஒன்றாக இடம் பெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

# தமிழ்நாட்டில் நேர்மை, திறமை கொண்ட அரசை அமைப்பேன்

## மூப்பனார் உறுதி மொழி

சென்னை, ஓக. 19

மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தக் கூடிய நேர்மையும், திறமையும், எளிமையும் கொண்ட அரசு ஒன்றை தமிழ்நாட்டில் அமைக்க தமிழ்மாநிலக் காங்கிரஸ் தலைவர் ஜி. கே. மூப்பனார் உறுதிமொழி எடுத்துக் கொண்டார்.

உலக அரங்கில்

விருதுநகரில் தமிழ்மாநில காங்கிரஸ் சார்பில் சுதந்திர பொன் விழா கொண்டாட்ட நிகழ்ச்சிகள் காமராஜர் பிறந்த இல்லத்தில் நடைபெற்றன.

நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அக்கட்சித் தலைவர்கள் சாதி, மத வேறுபாடுகளைக் களையவும் —

மாநிலத்தில் சமத்துவ சமுதாயத்தை ஏற்படுத்தவும் — உறுதிமொழி எடுத்தார்கள்.

உறுதிமொழி வாசகத்தை மூப்பனார் வாசிக்க ஏனைய தலைவர்கள் அதைத் திருப்பிக் கூறினார்கள்.

மத்திய அமைச்சர்களான ப. சிதம்பரம், எம். அருணாசலம், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், திருமதி ஜெயந்தி நடராசன் உட்பட பலர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ-3)

# இஸ்ரேலின் பொருள்கள் பகிஷ்கரிப்பு தொடரும் என்கிறது பலஸ்தீனம்

ஜெருஸலேம், ஓக. 19

பலஸ்தீன நிர்வாகம் அத்தியாவசியமற்ற இஸ்ரேலியப் பொருள்களைப் பகிஷ்கரிக்கத் தொடங்கியுள்ளது.

இஸ்ரேல் பலஸ்தீனத்துக்கு எதிராக விதித்துள்ள கடும் தடைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த பகிஷ்கரிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலியப் பொருள்கள் பலஸ்தீனத்துக்குள் நுழைவதில் இருந்து தடுக்கப்பட்டிருப்பதாக மூத்த பலஸ்தீன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மதுபானங்கள், மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள், சிகரெட்டுகள் ஆகியன அப் பொருள்களில் அடங்கும்.

கடந்த மாதம் ஜெருசலத்தில் நடந்த இரட்டைத் தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து விதிக்கப்பட்ட ,பொருளாதாரத் தடையை அகற்றுவதற்கு இஸ்ரேல் மறுக்கும் வரை அந்த நாட்டின் பொருள்களைப் பகிஷ்கரிக்கும் நடவடிக்கை தொடரும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-8)

## மூளை விளையாட்டுக்களுக்கான ஒலிம்பிக் போட்டி லண்டனில்

மூளை விளையாட்டுக்களுக்கான ஒலிம்பிக் போட்டிகள் நேற்று லண்டன் நகரில் ஆரம்பமாகின.

கணனியில் வேகமாக நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது, சதுரங்கம், நினைவாற்றல் குறுக்கெழுத்துப் போட்டிகள் போன்ற பல போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதுவரை காலமும் உடல் பலத்தை அடிப்படையாகக் கொண்ட போட்டிகளே உலகில் இடம்பெற்றுவந்தன.

மூளை பலத்தின் அடிப்படையில் கொண்ட போட்டிகளின் ஆரம்பம் இது என மூளை ஒலிம்பிக் போட்டி அமைப்பாளர் பொஹான் தெரிவித்துள்ளார்.

நேற்று ஆரம்பமான இப் போட்டிகளில் சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-10)

## சீனாவுக்கு எச்சரிக்கை

திபெத்திய மக்களின் சுயநிர்ணய உரிமையை நசுக்கும் நடவடிக்கைகளை சீனா தொடருமானால், அமெரிக்கா கடும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு தள்ளப்படும் என்று அமெரிக்கா சீனாவை எச்சரித்துள்ளது.

திபெத் தலைவர் தலாய் லாமாவுடன் சீனா பேச்சு நடத்த வேண்டும் என்றும் அமெரிக்கா கேட்டுள்ளது.

# 12 விநாடிகளுக்கு ஒருவர் இந்தியாவில் மலேரியாவுக்கு பலி

புதுடில்லி, ஓக. 19

இந்தியா மலேரியா நோயில் சிக்குண்டு பேராபத்து நிலையில் இருக்கின்றது என இந்திய மலேரியா ஆராய்ச்சிக் கழக இயக்குநர் வி. பி. சர்மா எச்சரித்தார்.

இந்தியாவில் 12 விநாடிகளுக்கு ஒருவர் மலேரியாக் காய்ச்சலால் மரணமடைகின்றார் என்று அவர் தெரிவித்தார்.

ஆபத்தான இந்த நோயை எதிர்கொள்ளும் வழிகளை ஆராய சுமார் 650 மருத்துவ நிபுணர்கள் கலந்து கொண்ட மாநாடு கடந்த சனிக்கிழமை ஹைதராபாத் நகரில் தொடங்கியது உலகசுகாதார நிறுவனம் மற்றும் 25 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

ஆண்டுதோறும் உலகில் 5 ஆயிரத்து 500 இலட்சம் மக்கள் மலேரியாக் காய்ச்சலால் தாக்கப்படுகின்றார்கள்.

மலேரியாவைப் பரப்புகின்ற நுளம்புகள், நுளம்புக் கொல்லி மருந்துகளை தாக்குபிடிக்கும் சக்தியைப் பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது. இது பேராபத்தின் அறிகுறி என்கின்றனர் விஞ்ஞானிகள்.

## தற்கொலை

தமது இரண்டு மனைவிமார்களுக்கு இடையில் ஏற்பட்டு வரும் பிணக்குகளைச் சமாளிக்க முடியாமல் நீதிபதி ஒருவர் தற்கொலை செய்து கொண்டார்.

பங்களாதேஷில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. ஜெயந்குமார் பிஸ்வாஸ் என்ற 43 வயது நீதிபதியே தற்கொலை செய்தவர் ஆவார். (இ-5)

# ஈரோஸ் தலைவர்களில் ஒருவரே சென்னையில் கைதானவர்

சென்னையில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழ் அமைப்பின் முக்கியஸ்தர், ஈரோஸ் அமைப்பின் உயர் தலைவர்களில் ஒருவரான சங்கர்ராஜி என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் உள்ள ஒருவீட்டில் வைத்து 2 லட்சம் அமெரிக்க டொலர்களுடன் இலங்கைத் தமிழ் அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என முன்னர் செய்தி வெளியாகியிருந்தது.

இது தொடர்பாக ஈரோஸின் பெண் பேச்சாளர் ஒருவர் தகவல் வெளியிடுகையில், "தவறு ஒன்று காரணமாக சங்கர்ராஜி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்" என்று தெரிவித்தார்.

லண்டனில் இருந்து சென்னைக்குச் சென்ற சங்கர்ராஜி சிங்கப்பூருக்கு செல்ல இருந்த சமயமே கைது செய்யப்பட்டார்.

சிங்கப்பூரில் வைப்புச் செய்வதற்காக லண்டன் வெளிநாட்டு நாணய மாற்றும் பணியகத்தில் இருந்து எடுத்து வந்த ஒரு லட்சத்து 15 ஆயிரம் டொலர்கள் அவரிடம் காணப்பட்டன என்றும் —

இவர் இவ்விதம் பணம் கொண்டு செல்வது வழமையாக இடம் பெறும் நிகழ்வு என்றும் — அறிவிக்கப்படுகிறது.

தாக்கத்தில் இருந்ததால் 75 ஆயிரம் டொலரை பிரகடனம் செய்ய மறந்து விட்டார் என்றும் —

அது தற்செயலாக இடம் பெற்ற ஒரு தவறு என்றும் — அந்த பெண் பேச்சாளர் தெரிவித்தார்.

# ஒதுக்கப்பட்ட நிதிவந்து சேரவில்லை; ஆஸ்பத்திரி திருத்த வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ். போதனாவைத்தியசாலையில் கட்டடத் திணைக்களத்தினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் திருத்த வேலைகள் முற்றுப் பெறாமலே ஸ்தம்பிதமடையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த யாழ். போதனா வைத்தியசாலையின் கட்டடத் திருத்த வேலைகள்; நீர்விநியோகம், மின்சாரம் சீரமைத்தல் போன்றவை கட்டடத் திணைக்களத்தினரிடம், சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தன.

1996 ஆம் ஆண்டு ஆஸ்பத்திரி மீண்டும் முழுமையாக இயங்கத் தொடங்குவதற்கு முன்பே புனரமைப்புப் பணிகள் கட்டடத் திணைக்களத்தினால் பொறுப்பேற்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வந்தது.

இதற்கான நிதியை சுகாதார அமைச்சே வழங்கி வந்தது.

1996 ஆம் ஆண்டுக்குரிய நிதியும், 1997 ஆம் ஆண்டுக்கான நிதியும் ஏற்கனவே ஒதுக்கப்பட்டு அதற்கமைய வேலைகள் பூர்த்தியாக வழங்கப்பட்டும் வந்தது.

தற்போது 1997 ஆம் ஆண்டுக்கான நிதியில் பூர்த்தியான வேலைகளுக்கான நிதி கடந்த மாதம் முதல் அனுப்பி வைக்கப்படவில்லை. இது பற்றி கட்டடத்திணைக்களம் சுகாதார அமைச்சிடம் பல தடவைகள் தொடர்பு கொண்டும் பலன் அளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதனால் கடந்த மாதத்துக்கான வேலையாள்களின் சம்பளம் இதுவரையும் வழங்கப்படவில்லை.

கட்டடத் திருத்த வேலைக்கு வேண்டிய நிதி பற்றாக்குறை - நிதி கைக்கு வந்துசேராத நிலை காரணமாக மேலும் வேலைகளைப் பூர்த்தி செய்யமுடியாத இக்கட்டான சூழ்நிலைக்கு கட்டடத்திணைக்களம் தள்ளப்பட்டுள்ளது.

நிதிவந்து சேராமையினால் கட்டடத் திணைக்களம் ஆஸ்பத்திரியில் திருத்த வேலை

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் விண்ணப்பித்து இங்கு பரீட்சை எழுதியோர் அவதி

## இன்னும் பெறு பேறு இல்லை

யாழ்ப்பாணம், ஒக. 19

வன்னியில் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சைக்கு விண்ணப்பித்து யாழ்ப்பாணத்தில் பரீட்சை எழுதியோருக்கு இன்னும் பெறுபேறுகள் கிடைக்கவில்லை.

கடந்த வருடம் இடம் பெற்ற ஜி சீ. ஈ (சாதாரண) பரீட்சைக்கு வன்னியில் விண்ணப்பித்த பலர் பரீட்சைக்கு முன் யாழ்ப்பாணம் திரும்பியிருந்தனர்.

அத்தகையோர் பரீட்சை எழுத இங்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது

ஜி. சீ. ஈ. பரீட்சை முடிவுகள் வெளிவந்த போதும், இவர்களுக்கு இன்னமும் பரீட்சை முடிவுகள் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக இந்த மாணவர்கள் உயர்தர வகுப்புக்கு அனுமதி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் யாழ். கல்வித் திணைக்களம் உருப்படியான நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

(இ-3)

# பேச்சுவார்த்தைக்கு யுத்த நிறுத்தம் முன் நிபந்தனையாயிருக்கக்கூடாது

## ரணில் தெரிவிப்பு

"விடுதலைப் புலிகளை பேச்சுக்கு இணங்க வைக்க நடக்கும் முன்னோடிப் பேச்சுக்களில் நிபந்தனை எதனையும் அரசு முன்வைக்கக்கூடாது. யுத்த நிறுத்தம் முன்நிபந்தனையாக இருக்கக் கூடாது".

ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நேரடியாகப் பேசவேண்டுமா? அல்லது அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு பேசவேண்டுமா? என்பது குறித்து அரசாங்கமே முடிவு செய்ய வேண்டும்.

அதன் பின்பே ஐ. தே. க தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும்.

விடுதலைப்புலிகள் பேச்சுக்கு இணங்க வைக்க நடக்கும் முன்னோடிப் பேச்சுக்களில் நிபந்தனை எதையும் வைக்கக் கூடாது யுத்த நிறுத்தம் முன் நிபந்தனையாக இருக்கக்கூடாது. யுத்த நிறுத்த காலத்தில் நடந்த பேச்சுவார்த்தையே தோல்வியில் முடிவடைந்தது.

யுத்த நிறுத்தத்தை யார் மீறினார்கள் என்று பிரச்சினை எழுவதே பேச்சுக்கு தோல்வியாக முடிகிறது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது என்பது இலகுவான விடயம் அல்ல. ஆனாலும் நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவர அவர்களுடன் பேச வேண்டும் என்பதை மறுக்க முடியாது.

எனக்கும், ஜனாதிபதிக்கும் இனப்பிரச்சினை விடயத்தில் இணைந்து செயற்பட இணக்கம் ஏற்பட்டது. கடிதங்கள் பரிமாறப்பட்டன: அரசும்—புலிகளும் பேசும்போது பேச்சின் முன்னேற்றம் அதில் ஏற்படும் இணக்கம் ஆகியன தொடர்பாக எனக்கு அறிவிப்பதாக இணக்கம் ஏற்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சு நடத்தும் பட்சத்தில் பொறுப்புள்ள கட்சியாக ஐ தே. கட்சி செயற்படும் ஐ. தே. க. வின் உண்மையான நிலைப்பாட்டை தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர். உள்ளூராட்சித் தேர்தலில் எமக்கு வாக்களித்த தன் மூலம் அதை அவர்கள் நிரூபித்துள்ளார்கள்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தொடர்ந்து பங்குபற்றுவோம். அதில் இருந்து விலகமாட்டோம்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும். இல்லையேல் இராணுவ ரீதியாக அவர்களைப் பலவீனப்படுத்த வேண்டும். அவர்களைப் பலவீனப்படுத்துவது நடக்கவில்லை. பெரிய தாக்குதலை நடத்தக் கூடிய அளவு அவர்கள் மேலும் பலம்பெற்றுள்ளனர்.

அரசு யுத்தத்தில் 80 சதவீதம் வெற்றிபெற்று விட்டது இன்னும் 20 சதவீதம் மட்டுமே உள்ளது என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்:

ஆனால் வடக்கு — கிழக்கு பகுதியில் கூடுதலான இடம் அவர்கள் கைகளில் உள்ளது.

இந்நிலையில் எப்படி நாம் யுத்தத்தில் வெற்றி பெறுகிறோம் என்று கூறமுடியும்?—

இப்படி அவர் கூறினார்.

(இ-150-3)

# நாடு பிளவுபடுவதைத் தடுக்க அதிகாரப்பரவலாக்கல் அவசியம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 19

"நாடு பிளவுபடுவதைத் தடுப்பதற்கு அதிகாரப் பரவலாக்கல் இன்றியமையாதது"

இப்படி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தெரிவித்தார்

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கும், அதிகாரப்பரவலாக்கலுக்கும் இடையே திட்டவட்டமான வேறுபாடுகள் இருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

எம்பிலப்பிட்டியாவில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அதிகாரப்பரவலாக்கல் என்பது தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் ஒருபரிசு என்று கருதிவிட முடியாது அதற்கு மாறாக இந்தத்திட்டத்தினால் சமூகத்தின் சகல பிரிவினரும் நன்மையடைய இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார்

(இ-3)

# துன்பங்களிலிருந்து விடுபட உதவும் இறைவழிபாடு, தெய்வ சிந்தனை

## நல்லைக்குமரன் வெளியீட்டு விழாவில்

திருநெல்வேலி, ஒக. 19

"இறை வழிபாடு, தெய்வ சிந்தனை ஆகியவற்றின் மூலம் மக்கள் தங்கள் வாழ்வின் ஒளியை காண முடியும். துன்பங்களில் இருந்து விடுபட முடியும் என்பதை உணர்த்தும் வகையில் ஆத்மீக தேடுநர்களுக்கும், முருகபக்தர்களுக்கும் நல்விருந்தாக இந்த "நல்லைக் குமரன்" மலர் வெளியிடப்பட்டுள்ளது"

இவ்வாறு யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற "நல்லைக் குமரன்" மலர் - 1997 வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு ஆய்வுரை நிகழ்த்திய யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி எஸ், சிவலிங்கராஜா குறிப்பிட்டார். யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவின் ஆதரவில் நடைபெற்ற இவ்விழாவுக்கு மாநகர ஆணையாளர் வே. பொ பாலசிங்கம் தலைமை வகித்தார்.

வரவேற்புரையை யாழ். மாநகரசபை பொது சனத் தொடர்பு உத்தியோகத்தரும், யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவின் செயலாளருமான இ இரத்தினசிங்கம் நிகழ்த்தினார்

ஆசிரியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ. குருமகாசந்நிதானம், மாவை. ஆதீனம் சிவஸ்ரீ சு. து. சண்முகநாதக்குருக்கள் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

கலாநிதி சிவலிங்கராஜா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், "அழகியல் அடிப்படையில் ஒரு நூல் எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு உதாரணமாக இம்மலர் திகழ்கின்றது.

நல்லை ஆலய முன்புற அழகிய தோற்றம் முன் அட்டையை அலங்கரித்து பக்திப்பரவசத்தை ஏற்படுத்துகின்றது.

பின்புற அட்டையில் அழகிய தேரேறி பக்தர்கள் கூட்டம் அலைமோத முருகப் பெருமான் பவனி வரும் அரிய காட்சி அலங்கரிக்கின்றது.

சமய வாழ்வு, இந்து மத கோட்பாடுகள் என்பனவற்றை விளக்கும் அரிய கட்டுரைகளும், ஆக்கங்களும் ஆன்மீக உணர்வுகளை தூண்டும் வகையில் சமய அறிஞர்களாலும், பெரியார்களாலும் எழுதப்பட்டுள்ளன.

முருகப்பெருமானின் கருணையையும், சிறப்புகளையும் தன்னகத்தே கொண்டு மிளிரும் இந்த மலர் பூசை அறைகளில் வைத்து தனித்துவமாக பேணிப் பாதுகாக்கப் படவேண்டிய அரிய பொக்கிஷம்" என்றார்.

விழாவுக்கு தலைமை வகித்த யாழ்.மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் தமது உரையில் இக்காலகட்டத்தில் நம் நாட்டில் மட்டுமல்ல உலகலாவிய ரீதியிலும் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்து நிம்மதி இழந்த நிலையில் வாழ்ந்து வருவதை காணக் கூடியதாக இருக்கின்றது.

விஞ்ஞான வளர்ச்சி அதி உயர்ந்த நிலைக்கு போய் விட்ட போதிலும் மெய்ஞ்ஞான உணர்வு ஆன்மீக தத்துவம் என்பன மக்களிடையே போதியளவு வளர்ச்சி அடையவில்லை.

நல்லைக்குமரன் மலர் எமது மக்களிடையே இறை உணர்வையும், இறைபக்தியையும் ஊட்டுவதற்குப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

ஆன்மீக தேடுநர்களுக்கும் முருக பக்தர்களுக்கும் இம் மலர் ஒரு நல்விருந்து.

இந்த நல்விருந்தை படைக்க முழு மூச்சாக உழைத்து வரும் குழுவின் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் அவர்களுக்கும் ஏனைய குழு உறுப்பினர்களுக்கும், விடயதானம் செய்துள்ளோருக்கும் பாராட்டுதல்களையும், நன்றியையும் தெரிவிக்கின்றேன் என்றார்.

மலர் வெளியீட்டுரையை நிகழ்த்திய பதிப்பாசிரியர் ந. விஜயசுந்தரம் தமது உரையில், கடந்த 1993 ஆம் ஆண்டு முதல் தடவையாக பூத்த இந்த மலர் இவ்வாண்டில் ஐந்தாவது மலராகி மணம் பரப்ப வெளிவந்துள்ளது மகிழ்ச்சிக்குரியது.

மலரின் தொடர்ச்சியும் மணம் கமழும் தன்மையும் நல்லை முருகன் நமக்களித்த அருட்கொடையின் ஆதாரம்.

யாழ்ப்பாணத்துக்கு இடப்பெயர்வின் பின்பு மீளவும் வந்தபின் இங்கு வெளிவந்த முதல் நூல் என்ற பெருமையும் இதற்கு உண்டு என்றார்.

சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும், யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியுமான வைத்திய அதிகாரி இ. தெய்வேந்திரன் சிறப்புரையாற்றுகையில், "ஆலயங்களில் நடைபெறும் திருவிழாக்கள் சமூகத்தை ஒன்றிணைத்து ஒற்றுமைக்கும் உரம் சேர்க்கின்றன ஊரும் சமூகமும் ஒன்று சேர்ந்து பிரார்த்திக்கும் போது போட்டிகள்—பூசல்கள் நீங்கி பொலிவு ஏற்படுகின்றது.

மக்களிடையே ஏற்படும் துர்க்குணங்கள் மன அமைதியை தரமாட்டா. இவற்றை நீக்க உலகில் ஒரே ஒரு மருந்து தான் உள்ளது. அது தான் இறை சிந்தனை—இறை வழிபாடு - முருக நாமம்.

எமது இந்து மதக் கோட்பாடு - இந்துமத தத்துவங்கள் — இவற்றுக்கு விளக்கம் அளிக்கின்றது. சமய தத்துவங்களை இந்த உற்சவ காலத்தில் மக்களிடையே பரப்பிக்கொண்டு வரும்புனித பணியாக நல்லைக் குமரன் மலர் விளங்குகின்றது என்றார்.

தெல்லியூர் செ. நடராசா உட்பட மற்றும் பலர் உரையாற்றினார்கள். பண்ணிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. பிரதம பொது சுகாதார பரிசோதகர் [illegible] சிவப்பிரகாசம் நன்றியுரை நிகழ்த்தினார். (இ-30-111-135)

# ஆணைக்குழுமுன் சாட்சியமளித்த எம். பி. மீது நடவடிக்கை இல்லை

கொழும்பு, ஒக. 19

சிங்கள ஆணைக்குழு முன் சாட்சியமளித்த குருநாகல் மாவட்ட பொதுமக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயசேன ராஜகருண மீது நடவடிக்கை எடுப்பதில்லை என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிங்கள ஆணைக்குழு முன்பாக சாட்சியம் அளித்ததாகவும்—

களுத்துறையில் அரச எம். பிக்களுக்கு நடந்த கருத்தரங்கில் இவர் வடக்கு — கிழக்கு இணைப்புக்கு எதிராகக் குரல் கொடுத்ததாகவும்; குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

இதற்காக ராஜகருண மீது ஒழுங்குநடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய உயர்மட்டக் குழு நியமிக்கப் பட்டிருந்தது:

இவர் மீதான குற்றச் சாட்டுக் குறித்து விசாரணை நடத்திய குழு இவர் மீது நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று சிபார்சு செய்துள்ளது. (இ-150-3)

# 3 மாதங்களுக்குப் போதுமான உணவுப் பொருள் கையிருப்பு

## யாழ். அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக, 19

குடாநாட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்களில் 3 மாதங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை கையிருப்பில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று யாழ். அரச அதிபர் க, சண்முகநாதன் தெரிவித்தார்.

குடாநாட்டில் மழைக்காலம் ஆரம்பித்தால் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்குவது பாதிக்கப்படும் என்றும்—

வன்னியில் இருந்து 40 ஆயிரம் மக்கள் வந்து சேர்வார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது என்றும்—

இதன் காரணமாக கூடுதல் உணவுப் பொருள்களை அனுப்ப மேலதிக கப்பல் ஒன்றைச் சேவையில் ஈடுபடுத்துமாறு கொழும்பில் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பதாகவும்—அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு இணைப்பு அதிகாரியுடன் நடத்திய பேச்சுக்களின் போது மேலதிக கப்பல் ஒன்றை சேவையில் ஈடுபடுத்த இணக்கம் ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்.

(இ-3)

# பரீட்சை நடத்துவோருக்கு வழங்கும் கட்டணம் அதிகரிப்பு

வலிகாமம் தெற்கு, ஒக. 19

அரசாங்க பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொதுப் பரீட்சைகளுக்கான மேற்பார்வையாளர்கள், நிரந்தர நோக்குநர்கள். சாதாரண நோக்குநர்கள் சிற்றூழியர்கள், இணைப்பு நிலைய உத்தியோகத்தர்கள் போன்றோருக்கான கொடுப்பனவுகளை பரீட்சை ஆணையாளர் அதிகரித்துள்ளார்.

கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் பரீட்சை நிர்வாக கட்டணங்கள் பின்வருமாறு அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்பார்வையாளர்கள் நாளொன்றுக்கு - 230 ரூபா.

நிரந்தர நோக்குநர்கள் நாளொன்றுக்கு - 195 ரூபா

சாதாரண நோக்குநர்கள் நாளொன்றுக்கு - 165 ரூபா.

சிற்றூழியர்கள்- நாளொன்றுக்கு - 100ரூபா;

இணைப்பு நிலைய உத்தியோகத்தர்களின் நாளொன்றுக்கான கட்டணங்கள் பின்வருமாறு: -

இணைப்பு நிலைய நிர்வாகி 300 ரூபா.

உதவி நிர்வாகி 230 ரூபா,

சிற்றூழியர் - 130 ரூபா.

சேகரிப்பு நிலைய நிர்வாகி- 325 ரூபா;

உதவி நிர்வாகி 250 ரூபா.

எழுதுவினைஞர்165 ரூபா;

சிற்றூழியர் 130 ரூபா;

(இ-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதானோர் - காணாமற்போனோர்

# சார்பாக மன்னிப்புச் சபைக்கு மகஜர்

யாழ்ப்பாணம் விஜயம் செய்துள்ள சர்வதேச மன்னிப்புச்சபை உறுப்பினர்களிடம் யாழ் மாவட்ட கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் நான்கு பக்க அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது மகஜரின் சாரம் வருமாறு:-

மனிதனுக்கு தான் வசிக்கும் தாய்நாட்டில் சுதந்திரமாக வாழ்வது முக்கியமானது.

சுதந்திரம் அற்றவரின் வாழ்க்கை துன்பமும், துயரமும் நிறைந்ததாகத் தான் அமையும்.

ஸ்ரீலங்காவில் தமிழர்களின் வாழ்க்கை அதற்கு எடுத்துக் காட்டாகும்.

வெளிநாட்டில் இருந்து ஓர் அமைப்பின் பாதணிகளாக நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள்.

இங்கு தற்சமயம் நடப்பது இராணுவ ஆட்சி. இங்கு வாழும் தமிழர்களாகிய நாங்கள் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்து எவ்வித சுதந்திரமும் அற்ற கைதிகளைப்போல் நடைப்பிணங்களாக வாழ்கிறோம்.

### சூரியப்பிரகாசம் இராணுவ நடவடிக்கை

''சூரியப்பிரகாசம்'' இராணுவ நடவடிக்கையோடு இராணுவத்தினர் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

அப்போது வலிகாமத்தில் இருந்து எல்லோரும் தென்மராட்சிக்கு இடம் பெயர்ந்தனர்.

அவர்கள் தமது அனைத்து உடைமைகளையும் விட்டு உயிர் தப்பினால் போதும் என்ற நிலையில் தான் தென்மராட்சிக்கு சென்றனர்.

அங்கு அவர்கள் பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள், பொது இடங்கள் மற்றும் உறவினர், நண்பர் வீடுகளில் தங்கியிருந்தனர். பலர் தங்க இடமின்றி வீதி ஓரங்கள், மரநிழல்கள் போன்ற இடங்களில் தங்கினர்.

அப்போது அரசின் பொருளாதாரத் தடை காரணமாக பொருள்களுக்கு தட்டுப்பாடும், விலை ஏற்றமும் காணப்பட்டன.

ஐந்து இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து வந்து அங்கு தங்கியதால் உணவுப்பற்றாக் குறை, குடிதண்ணீர் தட்டுப்பாடு, போதிய வைத்திய வசதியின்மை, சுகாதாரச் சீர்கேடுகள் அங்கு காணப்பட்டன.

இப்படியான பல இன்னல்களுக்கு மத்தியில் தான் அவர்கள் வாழ்க்கை நடத்தினர்.

### ஜனாதிபதியின் உறுதிமொழி

வலிகாமத்தை இராணுவம் கைப்பற்றிய போது மக்கள் எவரும் அங்கு இருக்கவில்லை.

அடுத்த நடவடிக்கை தென்மராட்சியை நோக்குவதாக இருந்த வேளையில், ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

''தமிழ் சகோதரர்களே! நீங்கள் வலிகாமத்தில் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள உங்கள் இடங்களில் மீளக் குடியேறுங்கள். இராணுவத்தினர் உங்களைப் பாதுகாப்பார்கள். உங்கள் அனைவருக்கும் சுபீட்சமான வாழ்வை ஏற்படுத்தித் தருவேன். குற்றம் புரிந்தவர்களாக இருந்தாலும் பொது மன்னிப்பு வழங்கப்படும்'' என்று அவரின் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஜனாதிபதியின் வாக்குறுதியையும், அரசையும், இராணுவத்தையும் நம்பிய நாம் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் மீளக்குடியமர்ந்தோம்.

### ஜனாதிபதி சொன்னது ஒன்று நடந்தது வேறு

இன்று நடந்தது என்ன? ஜனாதிபதியின் வாக்குறுதி எங்கே? பாதுகாப்பதாக கூறிய இராணுவத்தின் நடவடிக்கைகள் என்ன?

பலரும் அறியக் கூடியதாக சுற்றிவளைத்து தேடுதலின் போது இராணுவத்தால் மக்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

விசாரணை என்ற பெயரில் வீடுகள், பாடசாலைகள், தேவாலயங்கள், தொழிலகங்கள் ஆகியவற்றில் இராணுவத்தினர் நுழைந்து கைது செய்கிறார்கள்.

போக்குவரத்தின் போது சோதனைச் சாவடிகளில் தடுத்து விசாரித்து பின்னர் கைது செய்கிறார்கள். இவை அனைத்தும் பலர் முன்னிலையில் நடக்கின்றன.

பாடசாலை மாணவ மாணவிகள் ஆசிரியர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், அரசாங்க ஊழியர்கள் தனியார் நிறுவனங்களில் பணி புரிவோர், வர்த்தக நிலைய உரிமையாளர்கள், வைத்தியசாலை ஊழியர்கள், மாநகரசபை ஊழியர்கள், கிராம சேவையாளர்கள், செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு மற்றும் சர்வோதய அமைப்புக்களில் பணிபுரிந்தவர்கள், அன்றாடம் கூலி வேலை செய்து குடும்பம் நடத்துபவர்கள், கடற்றொழிலாளர்கள், சீவல் தொழிலாளர்கள் போன்ற பல தரப்பட்ட இளைஞர் யுவதிகள், பெரியோர்கள், வயது வேறுபாடின்றி கைது செய்யப்பட்டுள்ளனர். இன்னும் கைது செய்யப்பட்டு வருகிறார்கள்.

### இராணுவம் தட்டிக் கழிப்பு

கைது செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் இராணுவ முகாம் பொறுப்பதிகாரியிடம் சென்று கேட்டால், ''நாங்கள் பிடிக்கவில்லை; நாங்கள் காணவில்லை'' என்று தான் பதில் கிடைக்கும்

தமது பிள்ளைகளை, தமது கணவன் மாரை சகோதரங்களைத் தேடுவதில் இராணுவ முகாம் என்றும், பொலீஸ் நிலையம் என்றும் அலைந்து திரிந்து சோர்ந்து உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துயரிலும், தமது செல்வங்களுக்கு என்ன நேர்ந்ததோ என்ற ஏக்கத்துடனும் வாழ்கிறார்கள். இந்தச் சோகத்தினால் சிலர் இறந்தும் இருக்கிறார்கள்.

அலைந்து திரிந்து இயலாத நிலையில் பெற்றோர், உறவினர்கள் இணைந்து இச்சங்கத்தை உருவாக்கினோம். சங்கம் மூலம் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

வடபகுதிக்கு பொறுப்பான அதிகாரிகளான 51 ஆவது படையணி தளபதியை இரண்டு தடவைகளும் 52 ஆவது படையணி பிரிகேடியரை மூன்று தடவைகளும் சந்தித்து, கைதானவர்களின் விவரப்பட்டியலைக் கொடுத்து அவர்கள் பற்றிய விவரங்களை அறிய முயற்சி எடுத்தோம்.

ஆனால் அவர்களிடம் இருந்து சிறிய தகவல் கூட அறிய முடியாமல் இருக்கிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடமும் எமது கோரிக்கையை சமர்ப்பித்தோம். சிறைச்சாலைகளிலும், பொலீஸ் நிலையங்களில் உள்ளவர்களின் விடயத்தில் மட்டும் உதவ முடியும். கைதாகி மறைக்கப்பட்டவர்களின் விவரங்களை தங்களால் அறிய முடியாது என்றும் அவர்கள் கூறிவிட்டனர்.

### ஜனாதிபதியை சந்திக்கும் [illegible]

[illegible] உயர் அதிகாரிகளிடம் எமது பிரச்சினையை வலியுறுத்துவதுடன் நாடாளுமன்றத்திலும் பேசுமாறு தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கடிதம்மூலம் கேட்டுள்ளோம்.

எமது பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் பேச யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா ஏற்பாடு செய்தார்.

ஜனாதிபதியைச் சந்திக்க 7-6-97 இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பின்னர் 16-6-97-க்கு அது பிற்போடப்பட்டது. அத்திகதியும் பிற்போடப்பட்டு ஜனாதிபதியைச் சந்திக்க முடியாமல் போய்விட்டது.

எமது பிரச்சினை தொடர்பாக தொடர்ச்சியாக பல வழிகளில் முயற்சி எடுத்தும், எமது செல்வங்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதைக் கூட அறிய முடியாத நிலையில் நாம் உள்ளோம்.

பாதுகாப்பு அமைச்சு நியமித்துள்ள விசாரணைக்குழு பலகட்ட விசாரணைகளை பலாலியில் நடத்தியுள்ளது. கடந்த ஜனவரியில் 60 பேரையும், ஏப்ரலில் 60 பேரையும், ஜூனில் 200 பேரையும், விசாரணைக் குழுவினர் விசாரித்துள்ளனார்கள்.

ஆனால் இதுவரை நடந்த விசாரணைகளின் முடிவுகள் இன்னும் வெளியிடப்படவில்லை.

காணாமல் போனவர்களில் ஒருவரின் தகவலைக்கூட இந்தக் குழு இன்னமும் வெளியிடவில்லை.

மீண்டும் 360 பேரை கடந்த 13 ஆம் திகதி முதல் இக் குழுவினர் விசாரணைக்கு அழைத்துள்ளனர். ஏற்கனவே விசாரணைக்கு அழைக்கப்பட்ட 320 பேருக்கும் எந்தப் பதிலும் அனுப்பாமல் மீண்டும் விசாரணைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

### காலத்தை இழுத்தடிக்கும் தந்திரம்

இப்படியே விசாரணை, விசாரணை என்று காலத்தை போக்குவதால் தகவல் அற்று இருப்பவர்களின் பெற்றோர் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இந்த விசாரணைக்குழு பாதுகாப்பு அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளதால் அவர்களே பிடித்து அவர்களே விசாரணை செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

தங்களிடம் விடும் கோரிக்கைகள் இவைதான்.

★ பலர் மத்தியில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டவர்கள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உறவினர்களுக்கு அறியத்தர வேண்டும்.

★ அவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களிடம் இருந்து உறவினர்களுக்கு கடிதத் தொடர்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.

★ குற்றவாளிகளாகக் கருதும் பட்சத்தில் காலதாமதம் செய்யாது அவர்களை நீதியின் முன் நிறுத்த வேண்டும். (இ-3-103)

# இலங்கையில் 4500 யானைகள்

இறுதியாக எடுக்கப்பட்ட மதிப்பீட்டின்படி இலங்கையில் 4000 முதல் 4500 யானைகள் உள்ளன என வனவிலங்குகள் திணைக்களம் தெரிவிக்கிறது.

இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகள் இலங்கையில் 2000 முதல் 2500 யானைகள் உள்ளன எனத் தெரிவித்தன.

ஆனால் அந்த மதிப்பீடுகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என வனவிலங்குத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் கலாநிதி நந்தன அத்தபத்து தெரிவித்துள்ளார். (இ-10)

## செப்ரெம்பர் இறுதியில்

# 800 இணைப்புகளுடன் தொலைபேசி வசதி

குடாநாட்டுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் இடையில் 800 தொலைபேசி இணைப்புக்கள் அடுத்த மாத இறுதியில் செயற்பட ஆரம்பிக்கும் என்று ரெலிகொம் பிரதிப் பொது முகாமையாளர் எஸ். ஜனகசூரியர் தெரிவித்தார்.

இந்த இணைப்புக்களை வழங்க தேவையான பரிவர்த்தனை நிலைய உபகரணங்கள் கொழும்பில் உள்ளதாகவும்—

அவற்றை கப்பலில் எடுத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும்—

பண்ணை பரிவர்த்தனை நிலையத்தில் அவற்றைப் பொருத்தும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும்— அவர் கூறினார்.

இணைப்புக்களை வழங்குவதற்கான நிலத்துக்கு கீழான கேபிள்களை உடனடியாக திருத்த முடியாத நிலை இருப்பதாகவும்—

அதன் காரணமாக அன்ரனாக்கள் பொருத்தப்பட்டு அவை மூலம் இணைப்பு வழங்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார்.

''வயர்லெஸ்'' முறையிலான இந்த இணைப்பைப் பெற இதுவரை 200 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

## சிறுவன் காயம்

ஓடிக்கொண்டிருந்தலான்ட் மாஸ்டரில் இருந்து விழுந்து சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

உரும்பிராயில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராசரத்தினம் சபேஷ் (வயது 9) என்ற சிறுவனே காயமடைந்தவராவார். (இ-15)

## ஒதுக்கப்பட்ட....

(மூன்றாம் பக்கத் தொடர்) யில் ஈடுபட்டுவந்த பலதரப்பட்ட தொழிலாளர்களிலும் ஆள்குறைப்புச் செய்துள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்டோர் வேலை செய்து வந்த இடத்தில் ஆள் குறைப்பு செய்யப்பட்டு தற்போது 25 பேர் வரையிலேயே பணியாற்றி வருகின்றனர். இவர்களும் சம்பளமற்ற நிலையிலேயே வேலை செய்து வருகின்றனர்.

ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் மிகுதியை சுகாதார அமைச்சு அனுப்பி வைக்க தாமத மேற்படும் பட்சத்தில் தற்போது செய்யப்பட்டு வரும் குறைந்தளவு வேலைகளையும் இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என கட்டடத் திணைக்களப் பகுதியால் தெரிவிக்கப்பட்டது. (இ-15)


சக்திவாய்ந்த கச்சிதமான நம்பகரமான

"டென்யோ" ஜெனரேட்டர்




கையிருப்பிலிருந்து மாதிரிகள் கிடைக்கும்

★ 6. 5 கேவிஏ ஓசை குறைந்த (SOUND PROOF) டீசல், 3 பேஸ், சுயமாக இயங்கக் கூடியது ரூபா 2,75, 000/-

★ 2. 3, 2. 8, 3. 3, 3, 9 சிங்கிள் பேஸ் டீசல் என்ஜின் சுயமாக இயங்கக்கூடியது — ரூபா 75, 000/- மேல்

★ 2 கேவிஏ பெற்றோல் ரூபா 45, 000-/

கிடைக்குமிடம்:

N. M. L. TRADERS

என். எம். எல். டிரேடர்ஸ்

85, கொட்டா வீதி, பொரல்ல,

கொழும்பு - 8

தொலைபேசி எண்: 693617 பக்ஸ்: 500757

(சி/842)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

விறகுகாலை உபயோகத்திற்குரிய பெரிய தராசு, மூன்று இரும்பு குத்துக்காலுடன் கூடிய விலை கோருபவருக்கு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மா. புவனேந்திரன் ஆசிரியர் (அத்தியார் இந்துக் கல்லூரிக்கு எதிர் புறமாக) நீர்வேலிமத்தி. நீர்வேலி. [48987]

மாகாண எழுதுநர் பரீட்சை விண்ணப்பப் படிவங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தபாலில் பெறவிரும்புவோர் முத்திரை ஒட்டி சுயமுகவரியிடப்பட்ட உறையுடன் ரூபா 5 பெறுமதியான முத்திரையும் அனுப்பினால் பெறலாம். யாழ். புத்தக நிலையம், இல. 4, செட்டித் தெரு. நல்லூர், யாழ்ப்பாணம். (49065)

45 நாள் பருவமுடைய நல்லின பேட்டுக் கோழிக்குஞ்சுகள் (விநியோகம் 25-08-97 முன்தொடர்பு கொள்ளவும்; வட்டுக்கோட்டை கால் நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கம் (வ-உ) வட்டு. கிழக்கு, சித்தன்கேணி. (49073)

### தவறிவிட்டது

வியாபாரிமூலை பருத்தித்துறையைச் சேர்ந்த செல்வி கௌசல்யா கதிரவேற்பிள்ளை என்பவரின் 747962650V இலக்க தேசிய, விசேட அடையாள அட்டைகளும், இராணுவப் பாசும், சிறுதொகைப் பணத்துடன் பரமேஸ்வராச் சந்திக்கும் — நாவலர் வீதி சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்துமு.சிவநேசன், யாழ்./ கன்னாதிட்டி மக்கள் வங்கியில், உதயன் பணிமனையில் ஒப்படைக்கவும் (49079)

### மணமகன் தேவை

லண்டன், Book Keeping பரீட்சையில் மூன்று பகுதியும் சித்தியடைந்து, ஆங்கிலத்திலும், கம்பியூட்டரிலும் டிப்ளோமா பயின்று கொழும்பில் நல்ல உத்தியோகத்தில் இருக்கும் மூலநட்சத்திர ஏழில் செவ்வாயுள்ள 5'-9'' உயரமான மணமகளுக்கு மணமகன் தேவை. லண்டன், கனடா, ஆஸ்திரேலியாவில் நிரந்தர வதிவுடமையுள்ளவர்கள் விரும்பத்தக்கது. திருமதி இ. நாகராசா, பக்கஸ் ஒழுங்கை, மானிப்பாய். (49074)

### தேவை

தையல் மெஷின் தேவை; விற்பனைக்கு வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல; 109/2, சட்டநாதர் வீதி, நல்லூர். (49076)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது


நல்லூர்க் கந்தசாமி கோயில்வீதியில் திருவிழாக் காலத்தில் பெறுமதிமிக்க தங்க நகையொன்று கண்டு எடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி கீழ்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு:

க. கருணா
C/o
**N. ஜெயரட்ணம்**
**72/11, கடுக்காய்வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**நல்லூர்.**
[49081]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 06 — 02 — 1974

காலன் பிடியில்: 30 — 08 — 1996

செல்வன்
**கிருஷ்ணபிள்ளை கனகரத்தினம்**
**( குகன் )**
**திதி: 19 - 08 - 1997**

அன்பு மொழி பேசி
அனைவரையும் அரவணைத்தாய்
ஓராண்டு சென்றாலும் ஓயாதையா உன் நினைவு.

உன் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

அராலி வடக்கு, செட்டியார்மடம். (49049)

---

## முக்கிய அறிவித்தல்

**பண்டத்தரிப்பு**
**பனை தென்னை வள அபி. கூ. சங்கம்**
**30 - 09 - 97 இல் அங்கத்தவர் இடாப்பை மூடுதல்**

மேற்படி சங்கத்தின் கிளை ரீதியான அங்கத்தவர் இடாப்பு 30 - 09 - 97 இல் மூடப்பட்டு அதன் அடிப்படையில் உபவிதிக்கு அமைய வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு கிளைக் குழுத் தேர்தல்கள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் கீழ்க் காட்டப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. சங்க உபவிதிப்படி பங்கு ஒன்றின் பெறுமதி ரூபா 100 ஆகும், ரூபா 100 பங்குப் பெறுமதி உடையவர்களே வாக்காளர் பட்டியலில் இடம் பெறுவர்.
2. உறுப்பினர் ஒருவர் சங்கத்தின் அங்கத்துவத்தில் சேர்ந்து ஓராண்டுகளின் பின்னரே வாக்களிக்கவோ, நிர்வாகத்தில் இடம் பெறவோ முடியும்.

மா. மகேந்திரம்
தலைவர்

ச. செபஸ்ரியாம்பிள்ளை
செயலாளர்

(சி-1329)

---

**யாழ். மாவட்ட**
## விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்

**40 வீத கழிவுடன் மலிவு விற்பனை**

**சமாச இருப்பில் உள்ள கீழ்வரும் புடைவை வகைகள் விற்றுத் தீர்க்கும் முகமாக விசேட கழிவு விலைகளில் விற்பனைக்குள்ளன.**

| இல. | பெயர் | முந்திய விலை | தற்போதைய விலை |
|---|---|---|---|
| 01. | பப்ரா செலக்சன் | 138.00 | 85.00 |
| 02. | கலர் பப்பிளின் | 55.00 | 40.00 |
| 03. | செக் சேட்டிங் | 145.00 | 90.00 |
| 04. | றொன்சன் சேட்டிங் | 98.00 | 60.00 |
| 05. | சிலிவ் ரெக்ஸ் சேட்டிங் | 95.00 | 60.00 |
| 06. | 65 × 35 சேட்டிங் | 80.00 | 60.00 |
| 07. | கெனபோ ,, | 132.00 | 80.00 |
| 08. | ஏரபா ,, | 140.00 | 85.00 |
| 09. | ரடோ ,, | 145.00 | 90.00 |
| 10. | கஸ்பர் ,, | 138.00 | 85.00 |
| 11. | பெனியன் - (ஆண்கள்) | 35.00 | 25.00 |
| 12. | சேட் வகை | | |

இவற்றை நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்புறம், பருத்தித்துறை வீதியில், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கத்தின் நல்லூர் மத்தி கிளை இல. 12 இன் கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட விற்பனை நிலையத்திலும், சமாசப் பணிமனையிலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் கொள்வனவு செய்யலாம்.

- பொது முகாமையாளர்

இல: - 111,
பிரதான வீதி, (சி-1337)

---

## உடுப்பிட்டி மீன் சந்தை விரைவில் திறக்கப்படும்

உடுப்பிட்டியில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் மீன் சந்தைக் கட்டடத்தை யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி நேரடியாக சென்று பார்வையிட்டார்.

இக் கட்டடத்தை நிறுவுவதற்கு அகதிகளுக்கான ஐ. நா. தூதராலயம் 4 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

உடுப்பிட்டி பிரதேச சபை விசேட ஆணையாளரும் கரவெட்டி பிரதேச செயலருமான எஸ். ஸ்ரீநிவாசன் 45 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.

அத்துடன் உடுப்பிட்டி பகுதியிலுள்ள சனசமூக நிலையங்களும் அப் பகுதியிலுள்ள பொதுமக்களும் சிரமதானம் மூலம் சுமார் 45 ஆயிரம்ரூபா பெறுமதியான உதவிகளையும் வேலைகளையும் செய்துள்ளார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கட்டட கூரை வேலைகள் முடிவடைந்தவுடன் பொது மக்கள் பாவனைக்காக இந்த மீன் சந்தை திறந்து வைக்கப்படவிருப்பதாக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி. வி. கிருஷ்ணசாமி தெரிவித்தார். (இ-135)

## கொள்ளைக் கோஷ்டி கைது

நல்லூர், ஓக. 19

ஈவினை, புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்துக் கூறப்படுவதாவது:-

கடந்த பல மாதங்களாக இராணுவ சீருடையில் ஐவர் கொண்ட இக்குழு நவக்கிரி, சிறுப்பிட்டி, ஏழாலை அச்செழுப் பகுதிகளில் உள்ள வீடுகளில் இரவு நேரங்களில் புகுந்து சோதனையிடப் போவதாகக் கூறி வீட்டில் உள்ளவர்களை அச்சுறுத்தி அங்கிருக்கும் நகைகள், பணம் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருள்களைக் கொள்ளையடித்து வந்ததாகவும்—

நகைகள், பணம் என்பவற்றை மட்டுமல்லாது மாடுகளையும் இவர்கள் திருடிவந்ததாக— தெரிவிக்கப்பட்டது.

சில வாரங்களுக்கு முன் ஈவினையில் ஒருவரின் பட்டியில் நின்ற ஆறு மாடுகளையும் இவர்கள் திருடிச் சென்றிருந்தனர் என்று சொல்லப்படுகிறது.

தொடர்ச்சியாக இடம்பெற்றுவந்த இந்தச் சம்பவங்களால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் நிலாவரை இராணுவ பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து இராணுவ அதிகாரி எடுத்த முயற்சியினால் மேற்படி கோஷ்டியினர் பிடிபட்டதாகவும் சொல்லப்படுகிறது. (இ-103)

## உதவிப்பணம் பெறுவோருக்கு தையல் இயந்திரங்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் குடும்ப உழைப்பாளரை இழந்து மாதாந்த உதவிப் பணம் பெறும் 36 குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு இலவசமாக தையல் இயந்திரங்கள் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினரால் வழங்கப்படவுள்ளன.

தையல் இயந்திரங்களைப் பெற விரும்பும் மாதாந்த உதவிப்பணம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலர்கள் மூலம் விண்ணப்பிக்குமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இக் குடும்பங்களைச் சேர்ந்தோருக்கு தையல் பயிற்சி வகுப்புகள் மூலம் பயிற்சி வழங்கப்படுமெனவும்—

அவ்வாறு பயிற்சி பெற விரும்புவோர் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினருடன் தொடர்பு கொள்ளுமாறும்—

தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டு இக்குடும்பங்களின் வருமான அதிகரிப்பை ஏற்படுத்தி ஆறுமாதங்களின் பின்னர் உதவிப்பணம் வழங்குவது நிறுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார். (இ-117)

## நெடுந்தீவு மக்களின் தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை

''யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் உதவியுடன் நெடுந்தீவு மக்களின் அத்தியாவசிய தேவைகளான குடிதண்ணீர், வைத்தியம், பாடசாலை நூலக சேவை ஆகியவற்றை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளுவேன்''

இப்படி நெடுந்தீவு பகுதியில் உள்ள அரச திணைக்களத் தலைவர்களுடனான சந்திப்பின்போது நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கடந்த புதன்கிழமை இச் சந்திப்பு இடம் பெற்றது.

பலதரப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை இங்கு மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவற்றுக்கான செயற்பாடுகள் உரியமுறையில் நடைபெற திணைக்களத் தலைவர்களின் ஒத்துழைப்புத் தேவை. உங்களது ஒத்துழைப்புடனும் அரசாங்க அதிபரது உதவியுடனும் எமது தீவகத்தின் முக்கிய தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் கூறினார். (இ-111)

## குடும்ப நல சேவையாளருக்கு சைக்கிள்

திருநெல்வேலி, ஓக. 19

''யூனிசெவ்'' நிறுவனம் குடும்ப நல சேவையாளர்களுக்கு இலவசமாக சைக்கிள் வழங்கும் திட்டத்தின் கீழ் மேலும் 30 பெண்களுக்குரிய சைக்கிள்களை கொழும்பிலிருந்து கப்பல் மூலம் இங்கு கொண்டு வந்துள்ளது.

யாழ். சுகாதார பிராந்தியத்தில் கடமையாற்றும் வெளிக்கள குடும்ப நல சேவையாளர்களுக்கு விரைவில் இந்த சைக்கிள்கள் கையளிக்கப்படவுள்ளன என்று யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-135)

## நேர்முகப் பரீட்சை

பிரதேச தபால் அதிபர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை கொழும்பில் இவ்வாரம் நடைபெறுகிறது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கு யாழ். பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன், தபாலதிபர் எஸ். தர்மராஜன் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியைக் கொல்லும் சதியில் சில பொலீஸ் அதிகாரிகள் சம்பந்தம்?

## எந்நேரமும் அவர்கள் கைதாகலாம்

கொழும்பு, ஓக. 19

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை படுகொலை செய்ய பொலீஸ் அதிகாரிகள் சிலர் சதிசெய்தனர் எனக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசேட இரகசியப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் —

இந்த சதித் திட்டத்துடன் தொடர்புடைய சில பொலீஸ் அதிகாரிகள் இன்று அல்லது நாளை கைதுசெய்யப்படலாம் எனவும் ''லங்கா தீப'' சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டிருக்கின்றது.

இந்தப் படுகொலைச் சதித் திட்டம் தொடர்பான தகவல்களைப் பொலீஸ் சார்ஜன்ட் ஒருவரே முதலில் வெளியிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் இரகசியப் பொலீஸ் குழுவினர் இதுவரை 8 பொலீஸ் அதிகாரிகளை இரகசியப் பொலீஸ் பிரிவுக்கு அழைத்து நீண்டநேரம் விசாரணைகளை மேற்கொண்டனர் எனவும் இது தொடர்பாக மேலும் சிலபொலீஸ் அதிகாரிகள் இன்று அல்லது நாளை இரகசியப் பொலீஸ் பிரிவுக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கிடைத்துள்ள தகவல்களின் அடிப்படையில் பல பொலீஸ் அதிகாரிகள் கைது செய்யப்படவுள்ளனர் என்றும் —

விசாரணைகளுக்குப் பாதிப்பு ஏற்படும் என்பதால் இது தொடர்பாக மேலதிக விவரங்களை வெளியிட முடியாதுள்ளது என்றும் இரகசிய பொலீஸைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் கூறியதாக ''லங்கா தீப'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-10)

## பாலியல் வன்முறை குற்றச்சாட்டில் நீதிவான்!

நஷ்ட வியாபாரப் பிரச்சினை சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கணவன் குறித்து இரகசிய வாக்குமூலத்தைப் பதிய வேண்டும் எனக் கூறி அவரின் இளம் மனைவியை வாடி வீடு ஒன்றுக்கு அழைத்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதாக மாஹோ நீதிவான் லெனின் பண்டார ரத்நாயக்கா மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கம்பளை வாடி வீட்டில் ஒரு நாள் நீதிவான் தன்னை நான்கு முறை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினார் என அந்தப் பெண்மணி சத்தியக் கடதாசி மூலம் குற்றம் சுமத்தியுள்ளார்.

கடந்த வருடம் நிக்கவ ரெட்டியப் பகுதி நீதிவானாகக் கடமை புரிந்த சமயம் அவர் இவ்வாறு வன்முறைக்கு உட்படுத்தியதாக அந்த 27 வயதுடைய இளம் பெண் குற்றம் சுமத்தியிருக்கின்றார்.

ஆனால் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்களை நீதிவான் லெனின் பண்டார ரத்நாயக்கா மறுத்துள்ளார்.

இக் குற்றச்சாட்டு பற்றிய தகவல் சிங்களப் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்பட்டுள்ளது. (உ-10)

## பல இடங்களில் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19

கடந்த சனியன்று யாழ்ப்பாணத்தில் சில இடங்களில் ஆயுதங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சின் செய்திக் குறிப்பு தெரிவிக்கின்றது. விவரம் வருமாறு:-

★ நண்பகல் 12 30 மணியளவில் சுதுமலைப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் இரு புலிகள் ஓடுவதைக் கண்டு அந்த இடத்தில் தேடுதல் நடத்தினர். அப்போது கிடைத்த தகவலின் அடிப்படையில் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி ஒன்று, மகஸின் ஒன்று, 26 ரவைகள் ஆகியவற்றைப் படையினர் கண்டு பிடித்தனர்.

★ பிற்பகல் 2மணியளவில் இடைக்காடு பகுதியில் டாங்கி எதிர்ப்பு கண்ணி ஒன்றைப் படையினர் கண்டு பிடித்து அழித்தனர்.

★ மாலை 6.15 மணியளவில் சூராவத்தைப் பகுதியில் புலிகள் நடமாடுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து ரோந்துப் படையினர் அப் பகுதிக்கு விரைந்தனர்.

ரி-56 ரக ஆயுதம், மகஸின், 43 ரவைகள், 4 கிரனேட்டுகள், 100 மீற்றர் வயர் ஆகியவற்றைக் கைவிட்டு புலிகள் தப்பிச் சென்றனர். இரண்டு சந்தேக நபர்கள் விசாரணைக்காகக் கூட்டிச் செல்லப்பட்டனர்.

★ தமக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கடந்த வெள்ளியன்று பிற்பகல் 2.30 மணிக்கு அச்செழுப் பகுதியிலிருந்து ரி-56 ஆயுதம் ஒன்றையும், மகஸின் ஒன்றையும் 30 ரவைகளையும் படையினர் கைப்பற்றினர்.

—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-உ)

## உலக அழகி கொழும்பில்

கொழும்பு, ஓக: 19

கொழும்பு கிழக்கு றோட்டறிக் கழகத்தின் அழைப்பின் பேரில் உலக அழகு ராணி ஈரன் ஸ்கிலிவா கொழும்பு வந்துள்ளார்.

கடந்த ஆண்டு பெங்களூரில் நடைபெற்ற உலக அழகு ராணிப் போட்டியில் இவர் உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஐ)

# தெற்கில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்

## வடக்கு--கிழக்கிலேயே பெரும் பற்றாக்குறை

கொழும்பு, ஓக. 19

நாட்டில் வடக்கு - கிழக்கு மாகாணம், வட மத்திய மாகாணம் மற்றும் மேல் மாகாணம் ஆகியனவற்றில் மட்டுமே ஆசிரியர் வெற்றிடங்கள் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றிலும் வடக்கு — கிழக்கிலேயே அதிகமான வெற்றிடங்கள் உள்ளன.

ஏனைய மாகாணங்களில் கணிதம், விஞ்ஞானம், அழகியற்கல்வி, விவசாயம், தொழில் நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகின்ற போதிலும் இந்த மாகாணங்களில் ஏனைய பாடங்களுக்கான ஆசிரியர்கள் தேவைக்கு அதிகமான எண்ணிக்கையில் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கல்வி அமைச்சின் உத்தியோகப்பூர்வமற்ற தகவல்களின்படி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் 5,350 ஆசிரியர் வெற்றிடங்களும், மேல் மாகாணத்தில் 1,950 ஆசிரியர் வெற்றிடங்களும் வடமத்திய மாகாணத்தில் 1,020 ஆசிரியர் வெற்றிடங்களும் நிலவுகின்றன.

தென் மாகாணத்தில் மேலதிகமாக 1,670 ஆசிரியர்களும் சப்பிரகமுவ மாகாணத்தில் மேலதிகமாக 62 ஆசிரியர்களும், வடமேல் மாகாணத்தில் மேலதிகமாக 780 ஆசிரியர்களும் மத்திய மாகாணத்தில் மேலதிகமாக 810 ஆசிரியர்களும், ஊவா மாகாணத்தில் மேலதிகமாக 350 ஆசிரியர்களும் பணியாற்றுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## சாவகச்சேரியில் இருந்து நல்லூருக்கு மினிபஸ் சேவை

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவத்தையொட்டி தென்மராட்சி சிற்றூர்தி சேவைகள் சங்கத்தினர் சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து தனங்கிளப்பு ஊடாக நல்லூர் வரை விசேட மினிபஸ் சேவையினை நேற்று முதல் ஆரம்பித்துள்ளனர்.

காலை 8.00 மணிக்கு சாவகச்சேரி பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் மினிபஸ் தனங்கிளப்பு, நாவற்குழி ஊடாக நல்லூர் சென்றடைந்து மீண்டும் பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூரிலிருந்து புறப்பட்டு இதே மார்க்கமாக சாவகச்சேரியை வந்தடையும். (ஐ-117)

### நல்லூர் உற்சவகாலச் சிறப்பம்சம்

## "நல்லைப்பதி நாயகன்"

பேர் பூத்த கந்தன் சிவனாரின் மைந்தன்
தேவர்கள் சிறை மீட்ட செல்வன்
அருள் சக்தி உமை பாலன்
அன்பர்களின் நேயன்
தவ ஞான பண்டிதன்
தரணி யெல்லாம் புகழ் படைத்த
சர்வலோக நாயகன்
ஜெகமெல்லாம் காத்திடும் ஜெகதீஸ்வரன்
உலகோர் போற்றும் பூரணன்
கலகம் தீர்க்கும் காரணன்.
கன்னித் தமிழ் [illegible]
நல்லைப் பதி [illegible] நாயகன்

கு - சிவனேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜெயராஜ் லண்டனுக்கு

யாழ்ப்பாணம், ஓக: 19

லண்டன் சிவன் கோயிலில் அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் 10 நாள்கள் நடைபெறவுள்ள உற்சவத்தின் போது அங்கு தொடர் சொற்பொழிவாற்றுவதற்காக அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெயராஜ் இம்மாத இறுதியில் லண்டன் பயணமாகவுள்ளார். (ஐ-உ)

## பெண்களுக்கு கடனுதவி

தென்மராட்சி, ஓக. 19

தென்மராட்சி உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் முயற்சியினால் தென்மராட்சிப் பிரிவில் பனம் பொருள் கைப்பணித் தொழிலில் ஈடுபட்டுள்ள பத்துப் பெண்களுக்கு இலங்கை வங்கியின் சுயதொழில் முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் தலா பத்தாயிரம் ரூபா கடனாக வழங்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம், ஓக. 19

வீட்டுக் கூரை மீது ஏறிய சிறுவன் தவறி விழுந்து காயமடைந்தார்.

யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத் தெருப் பகுதியில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் சௌந்தரம் சஞ்சயன் (வயது 12) என்ற சிறுவனே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நாளை

**ஆவணி 4**

புதன்கிழமை

திதி: துதியை பிற்பகல் 12.48 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி முன்னிரவு 11:13 வரை.
சுபநேரம்: 4.35 -6.05
ராகுகாலம்: 12.05 -1.35
(பகலுக்கும் இரவுக்கும் பழையபடி)

# உதயன்

## இரண்டும் கெட்டான் நிலை

வடகதுக்கான சரக்குக் கப்பல், பயணிகள் கப்பல் சேவைகள் இன்னும் வழமை நிலைக்குத் திரும்பவில்லை.

தற்போதைய நிலையில் திருகோணமலையிலும், மன்னாரிலும் கப்பல் சேவையை எதிர்பார்த்து பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் தவம் கிடக்கின்றனர்.

இவர்களைவிட கப்பல் சேவை ஆரம்பித்தவுடன் திருகோணமலை வருவதற்காக கொழும்பிலும் வவுனியாவிலும் காத்துக்கிடப்போர் பல நூற்றுக்கணக்கானோர்.

விடுதலைப் புலிகளினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டதாக அரசாங்கம் குற்றஞ் சாட்டுகிறது.

ஆனால் இக்கப்பல்கள் படையினருக்கான ஆயுத தளபாடங்களை ஏற்றப் பயன்படுத்தப்பட்டு வந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கின்றனர்.

''வெற்றி உறுதி'' படையணியினர் மீது நடத்தப்பட்ட மூன்று பெரிய தாக்குதல்களும் —

''மிசென்'' ''மொறாங் பொங்'' கப்பல்கள் தாக்கப்பட்ட சம்பவங்களும் — யுத்தத்தின் மூலோபாயத்தையே மாற்றி விட்டதாக தென் பகுதி அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தற்பொழுது ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலைமையையே இது கோடி காட்டுகிறது.

வடக்கில் உள்ளோர் வெளி இடங்களுக்குச் செல்வதற்கும் வெளி இடங்களில் உள்ளோர் வடக்கே வருவதற்குமான சகல பாதைகளும் ஒரு கட்டத்தில் முடங்கிப் போய் இருந்தன.

தற்சமயம் லயன் எயர் விமானச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் வான் பாதை திறக்கப்பட்டு விட்டது. விமானப் பயணத்துக்கு அதிகரித்த கட்டணம் கொடுக்கவேண்டி இருப்பதால் இது அனைவருக்குமான ஒன்று என்று சொல்ல முடியாது; கப்பல் பாதையே பிரதானம்.

கடல் வழிப்பாதையைத் திறப்பதற்கு சர்வதேச தொண்டர் நிறுவனங்களான செஞ்சிலுவை சர்வதேசக் குழு, அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் மூலம் புலிகளின் ஒத்துழைப்பைப்பெற முயற்சிக்கப்பட்டது. ஆனால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை;

தற்பொழுது கடற்படையினரின் பாதுகாப்புடன் கரையில் இருந்து 40 மைல் தூரத்தில் கப்பல்களை சேவைக்கு விட அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மன்னாருக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் தராகி கப்பல் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயணிகள் சேவையை நடத்தி வருகிறது.

ஆனால் அரசாங்க ஊழியர்கள், அவசர தேவைகளுக்கு பயணம் செய்வோர் மற்றும் அகதிகளுக்காகவே இந்தச் சேவை நடத்தப்படுகிறது;

திருகோணமலை — காங்கேசன்துறை பயணிகள் சேவைக்காக இரு கப்பல்கள் பெறப்பட்ட போதிலும் அவற்றின் சேவை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை.

ஆகவே இந்த நிலையில் அரசுக்கு இரு வழிகளே உள்ளன. ஒன்று கப்பல் சேவை குறித்து விடுதலைப் புலிகளுடன் நேரடியாகப் பேச வேண்டும். மற்றது சவால்களை எதிர் கொண்டு சேவையைநடத்தவேண்டும்.

இரண்டும் கெட்டான் நிலையே நீடிக்கிறது.

# கைதிகளை விடுவித்து சரணடைய முன் வந்தார் சந்தன வீரப்பன்!

சென்னை, ஒக. 19

பிரபல சந்தன மரக் கடத்தல் வீரப்பன் தான் பிடித்து வைத்துள்ள கர்நாடக வனத்துறை அலுவலர்கள் எட்டுப் பேரையும் விடுவித்து சரணடைய முன் வந்துள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக முதல்வர் மு. கருணாநிதிக்கும் கர்நாடக முதல்வர் ஜே எச் பட்டேலுக்கும் காட்டுக்குள் இருந்து நேற்று முன்தினம் அனுப்பிய ஒலிப்பதிவு நாடா ஒன்றிலேயே வீரப்பன் சரணடையும் தமது விருப்பத்தை வெளியிட்டுள்ளார்.

வனத்துறை அலுவலர்களை விடுவிக்க 5கோடி ரூபா தரப்படவேண்டும் என்று முன்னர் விதித்திருந்த நிபந்தனையைத் தான் கைவிட்டு விட்டதாகவும் வீரப்பன் அந்த ஒலிப்பதிவு நாடாச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கைதிகள் எட்டுப்பேரும் சுகமாக இருப்பதாகவும் வீரப்பன் தெரிவித்துள்ளார்.

வீரப்பன் அனுப்பிய ஒலிப்பதிவு நாடா தமிழக முதல்வர் கருணாநிதியிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் —



வீரப்பனின் விருப்பம் குறித்து கர்நாடக அரசுடன் கலந்து பேசி விரைவில் இது குறித்து முடிவு எடுப்பதாக அவர் கூறியிருப்பதாகவும் 'நக்கீரன்' ஆசிரியர் கோபால் தெரிவித்தார்.

சரணடைவதற்கு வீரப்பன் விதித்துள்ள நிபந்தனைகள் குறித்துப் பேச்சு நடத்தக் கர்நாடக முதல்வர் ஜே.எச். பட்டேல் இன்று சென்னை வருகிறார். அவருடன் கர்நாடக வனத்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர்களும் உடன் வருகின்றனர்.

அவர்கள் சென்னையில் இன்று தமிழக முதல்வர் மு. கருணாநிதியைச் சந்தித்து வீரப்பனின் நிபந்தனைகள் குறித்துப் பேச்சு நடத்தி முக்கிய முடிவை எடுப்பர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-10)

## நீதிமன்ற தீர்ப்பு இன்று

கொழும்பு, ஒக. 19

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரேயைக் கைதுசெய்து தடுத்து வைத்திருப்பதற்கான உத்தரவை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நீதியரசர்கள் கலாநிதி ரஞ்சித் அமரசிங்க, ஏ.எஸ் விஜேதுங்க, அசோகா டி. இஸட் குணவர்த்தனா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு விசாரணை செய்யப்பட்டிருந்தது. (உ)

## மட்டு. நகர வீதிகளில் போக்குவரத்துத் தடை

கொழும்பு, ஒக. 19

மட்டக்களப்பு நகரில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு அரண்கள், சோதனை நிலையங்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

மட்டக்களப்பு — திருமலை வீதி மாலை 6 மணியுடன் போக்குவரத்துக்குத் தடை செய்யப்படுகிறது. இதனால் லொயிட் அவெனியூ வீதி வழியாகவே பின்னர் திருமலை வீதிக்குச் செல்ல முடியும். இந்த வீதியிலும் மூன்று இடங்களில் வேகத்தடைகள் போடப்பட்டுள்ளன.

மாநகரசபை, பிரதேச சபை என்பவற்றுக்குச் செல்லும் தபால் நிலைய முன்வீதி முற்றாக மூடப்பட்டுள்ளது.

கோட்டை முனைப் பாலத்தில் உள்ள பாதுகாப்பு அரண் முன்னர் இருந்த இடத்தில் இருந்து சற்றுப் பின் தள்ளி அமைக்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## தீர்வு யோசனைக்கு மலையக தமிழரின் ஆதரவு கிடைக்காது!

### அமைச்சர் தொண்டமான் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 19

அரசின் அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் மீது மலையகத் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டீ. எம். ஜெயரட்னவுக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே அமைச்சர் தொண்டமான் இவ்வாறு தெரிவித்துள்ளார்:

''அதிகாரப்பரவலாக்கல் தொடர்பான யோசனைகளுக்கு மலையகத் தமிழ் மக்கள் ஆதரவு தருவார்கள் என்று எதிர்பார்க்கவேண்டாம். அவர்களது ஆதரவைப் பெறுவதே கடினமானகாரியமாக இருக்கும்'' — என்று அக்கடிதத்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி இன்றிரவு பதில்

கொழும்பு. ஒக. 19

''உங்கள் கேள்விகளுக்கு ஜனாதிபதியின் பதில்'' என்ற நிகழ்ச்சி இன்று இரவு 8.30 மணிக்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி, ஐ. ரீ. என் தொலைக்காட்சி ஆகியவற்றில் ஒரே நேரத்தில் ஒலி, ஒளிபரப்பாகவுள்ளன.

இந்த நிகழ்ச்சியின்போது பொதுமக்களின் கேள்விகளுக்கு ஜனாதிபதி நேரடியாக பதிலளிக்கவுள்ளார்.

ஜனாதிபதியிடம் கேள்வி கேட்டு ஆயிரக் கணக்கான கடிதங்கள் கிடைத்துள்ளதாக நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நேயர்கள் தொலைபேசி மூலமும் கேள்விகளைக் கேட்க ஏற்பாடாகியுள்ளது.

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்று மூன்றாண்டுகள் நிறைவடைவதை ஒட்டியே இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)


## முதற் திருப்பலி

சில்லாலைப் பங்கைச் சேர்ந்த

### அருட்திரு ஜேம்ஸ் டன்ஸ்ரன்

அடிகளார் தமது முதற் திருப்பலியை நாளை (20-08-97) புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக் கொடுப்பார். இப்புனித நிகழ்விற்கு அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், இறைமக்கள் ஆகிய அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றீர்கள்.

பங்குத்தந்தையும்,
பங்கு மக்களும்.

[49085]

சாவகச்சேரியில்

## இன்னிசை நற்செய்தி பெருவிழா!

உலகப் பிரசித்தி பெற்ற பாடகர்

### அருட்தந்தை பேர்க்மான்ஸ்
அவர்கள்

இடம்: நகரசபை மைதானம் - சாவகச்சேரி
(நவீன சந்தை பின்புறம்)
காலம்: இன்றும் நாளையும் ஆகஸ்ட் (19-20)
நேரம்: தினமும் மாலை 3. 30 மணி
(புதிய நேரம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம் இலவசம்!

[48960]


## விலை உயர்வு குறித்த அறிவிப்புகள் வெளியான தினங்களால் சர்ச்சை!

கொழும்பு, ஒக. 19

பாண், கோதுமை மா ஆகியவற்றின் விலைகள் அதிகரிக்கப்படுவது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவித்தல்கள் வெளியான திகதிகளுக்கும் முக்கிய அரசியல் சம்பவங்கள் இடம்பெற்ற தினங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு குறித்து ஆளும் கட்சி பிரமுகர்கள் சிலர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இது குறித்து அரச உயர் மட்டத்துக்குச் சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்து விசாரணைகள் இடம்பெறுவதாக 'ராவய' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கோதுமை மா மற்றும் பாண் ஆகிறவற்றின் விலைகள் கடந்த 12 ஆம் திகதி அதிகரிக்கப்பட்டன.

1953 ஆம் ஆண்டு அப்போதைய ஐ. தே. க. அரசு அரிசியின் விலையை உயர்த்தியதும் அதை எதிர்த்து நாடளாவிய ரீதியில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதும் இதே நாளில் ஆகும்.

இதேபோன்று கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டது. முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிரார்த்த தினம் அன்றாகும்.

மக்கள் மீது சுமையைத் திணிக்கும் இத்தகைய விலையேற்ற அறிவிப்புகள் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த தினங்களில் வெளியிடப்படுவது குறித்து அரசுக்குள் ஒரு பிரிவினர் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளனர். (ஐ-10)

## திருமலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு உடனடியாகத் தகவல் அனுப்பியதாகவும் —

அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இது குறித்து தொடர்பு கொண்டு பேசியதாகவும் —

திருகோணமலை ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இச்சம்பவத்தை அடுத்து, —இராணுவத்தினரின் செயல்களைக் கண்டித்து—அப்பகுதி மக்கள் நேற்று நண்பகல் அளவில் திருகோணமலை— நிலாவெளி வீதிக்குக் குறுக்கே வீதித் தடைகளைப் போட்டு மறியல் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர்.

இந்த வீதி மறிப்புப் போராட்டத்தைக் கேள்விப்பட்டு, அப்பகுதிக்கு விரைந்த படையினர் வானத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்து மக்களை விரட்டினர்.

படையினரின் வேட்டுக்களை அடுத்து மக்கள் சிதறி ஓடினர்; அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டது.

மக்கள் போட்டிருந்த வீதித் தடைகளை படையினர் அகற்றினர்.

எனினும் நேற்று மாலை அளவில் நிலைமை வழமைக்குத் திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்த இளைஞரின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும்—

கைதான நான்கு இளைஞர்களும் விடுவிக்கப்பட்டதாகவும் —

நேற்றிரவு தெரிய வந்தது.

இந்த விவகாரம் குறித்துத் திருகோணமலையில் உள்ள ஈ. பி. டி. பி. அலுவலகத் துணைப் பொறுப்பாளர் சீலன் மற்றும்பாபு ஆகியோர் திருகோணமலைப் பொலீஸ் அத்தியட்சகர் கொல்வின் சில்வாவுடன் தொடர்பு கொண்டதாகவும் —

அப்போது —

இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய 4 படையினர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் —

இனிமேல் இப்படியான சம்பவம் இடம்பெற இடமளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டதாக அறிய வந்தது. (உ-3-150)

## படை நடவடிக்கை..

(முதலாம் பக்கத் தொடர்)

படையினரால் எட்ட முடிந்துள்ளது.

இன்னும் 48 கிலோ மீற்றர் தூரத்தை அவர்கள் தாண்டினால் தான் கிளிநொச்சியில் உள்ள துருப்புகளை அவர்கள் எட்டமுடியும்.

'வெற்றி உறுதி' படை நடவடிக்கையில் இதுவரை 530 படையினர் பலியாகியுள்ளனர் என்றும் —

சுமார் 3 ஆயிரத்து 200 துருப்புகள் காயமடைந்துள்ளனர் எனவும் —

சுயாதீன செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தனியொரு இராணுவ நடவடிக்கையில் ஸ்ரீலங்காப் படையினர் சந்தித்த ஆகக் கூடிய இழப்பு இது என்று அவ்வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன.

கடந்த 98 நாள்களில் மூன்று தடவைகள் விடுதலைப் புலிகள் நடத்திய ஊடறுப்புத் தாக்குதல்களினாலேயே படையினர் பலத்த இழப்புக்களைச் சந்தித்துள்ளனர். (உ-ஐ)

## பர்மாவில் மூவருக்கு 10 வருட சிறை

மியான்மார், ஓஸ்ட் 19

பர்மாவில் ஜனநாயகத்துக்கு ஆதரவான தலைவர் ஆங் சாங் சூகியின் சகோதரர்கள் முறையான மூவருக்கு பர்மிய விசேட நீதிமன்றம் ஒன்று 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

இந்த மூவரும் வெடிப் பொருள்களையும் பெருந்தொகையான பணத்தையும் ஆங் சாங் சூகிக்கு கடத்திக் கொண்டு வரும் அமெரிக்கச் சதித்திட்டம் ஒன்றில் தொடர்பு உள்ளவர்கள் என ராணுவ அதிகாரிகள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று தெரிவித்தது. (இ-5)

## விருது பெற்றவர் லஞ்ச வலையில்

புதுடில்லி, ஒக. 19

கடந்த வெள்ளிக்கிழமை இந்திய சுதந்திர தின பொன் விழாக் கொண்டாட்டங்களின் போது மிகச் சிறந்த சேவைக்காக குடியரசுத் தலைவர் விருது பெற்ற மகாராஷ்ட்ர மாநில காவற்துறை ஆய்வாளர் ஒருவர் நேற்று முன்தினம் 50 ஆயிரம் ரூபா லஞ்சம் வாங்கும் போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார். (இ-5-10)

## பாடகர் மரணம்

சத்குரு தியாகராஜரின் 150 ஆவது ஆண்டு தினத்தையொட்டி 150 இசைக்கச்சேரிகளை நடத்தி முடிக்க திட்டமிட்ட இந்திய பிரபல பாடகர் எஸ். வெங்கட்ராமன் 99 ஆவது கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அரங்கிலேயே மரணமானார்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-08-1997இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org